தமிழ் நூல் முறை

ஆக்கியோன்

P. R. மீனாக்ஷி சுந்தர முதலியார், B.A B L.,

தமிழ் நூல் விளக்கு முதற் பாகம்
சொல்லதிகார விளக்கம் முதலிய
நூல்களை இயற்றியவர்

கள் நூல
ADIGAL

காப்பி உரிமை
ஆக்கியோருக்கே

1940

[விலை ரூ. 1]

அடக்கம்

	பக்கம்
முகவுரை	i
கபிலர்	1
குறிஞ்சிப்பாட்டு	8
இறையனார் களவியல்	9
ஞானசம்பந்தர்	14
நக்கீரர்	17
காப்பியம்	21
ஆதிரை	23
சுகிருதீ பிரபந்தி	24
திருவாசகம்	28
மாஜம்தார் என்னும் பெங்காளி ஆசிரியர்	32
முகக்குணம்	34
அறம் அறிவு மெய்	43
மடலேறுதல்	45
தமிழ் இலக்கணம் — திணை பால்	47
வடமொழி இலக்கணத்தில் திணை பால் வேற்றுமை வகுப்பு	48
தமிழில் பொருட்டிணை அமைந்திருக்கும் வடமொழியில் சொற்றிணை அமைந்திருக்கும் காரணம்	51
வடமொழியில் பெயர்ச் சொல்லுக்குரிய திணைப் பாகுபாட்டின் சிறப்பு	52
குறுந்தொகை	57—69
இணைப்பு	70

தமிழ் நூல் முறை

முகவுரை.

தமிழ் மக்களிடத்தில் அன்பு கொண்ட சில தமிழ்ச் செல்வமாந்தரின் பண உதவி ஊக்கத்தால் சில மாதங்களிற்கு முன் தமிழ் நூல் விளக்கு - முதற்பாகம் என்ற புதுக்கருத்துடை நூலை நான் இயற்றி வெளியிட்டேன். அந்நூலைத் தமிழ்ப்புலமை வாய்ந்த பல பெரியோர்கள் கையில் கிடைக்கும்படி செய்தேன். பேராண்டவன் அருளால் தமிழ் மக்களிடைக் கண்ணோட்டமும் தமிழ் நூற்பரப்பின் நுண்ணிய தேர்ச்சியும் உடைய மறை மலை அடிகள் பல்லாவரத்திலுள்ள தம் உறையுளிலிருந்து தமிழ் நூல் விளக்கு முதற்பாகத்தைப்பற்றித் தங்களுடைய உளக் கிடக்கையை ஒரு கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்கள். அக்கடிதத்தில் அவர்கள் அடியிற்கண்டவாறு கூறுகிறார்கள் :

"....... ஆங்கில மொழிப்புலமை வாய்ந்தார் தங்களைப்போல் தமிழ் புலமையும் வாய்ந்து தங்களைப்போற் புதிய முறையில் ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிடுவாராயின் நம் தமிழ் நாடு விரைவில் முன்னேற்றமடையும். தங்கள் நூலை ஊன்றிப்பயில விழைகின்றேன.. . .. "

யான் லாபம் கருதாது எனக்குப் புதிதாகத் தெரிந்த சில கருத்துகளை வெளியிட்டதற்கு மகிழ்ந்து என்னை மெச்சிய பெரியார் அவர்களுக்கு என்னால் செய்யக்கூடிய கைம்மாறு யாதுமிலது.

இனித் தமிழ் நூல் முறை என்பபெயரிடப்பட்ட இந் நூலில் சாங்கிய நூல் ஆதியில் தமிழில் இருந்திருக்கக் கூடும் என்று யூகிப்பிற்குரிய காரணங்களையும் அந்நூலின் இறைவன் தக்ஷிணாமூர்த்தி என்று பிற்காலத்தில் வணங்கப் பட்ட தமிழ்த்தென்னவனாகிய ஆதிரையானா யிருக்கலாம் என்ற கொள்கையையும் மாற்கண்டன் துர்வாசன் கபிலன் என்ற பேர்கள் அவ்விறைவன் தொடர்பையே குறித்திருக்க வேண்டும் என்ற கொள்கையையும் துணிந்து வெளியிடு கின்றேன்.

தமிழ் இலக்கணத்தில் திணைப்பாகுபாட்டின் தன்மை யைப் பற்றியும் 'மடலேறுதல்' என்பதன் கருத்தைப் பற் றியும் கட்டுரைகள் இந்நூலில் அமைந்திருக்கின்றன. இந் நூல் வெளிவருவதற்கு முன் பணவுதவி செய்வதாகச் சொல்லி என்னை ஊக்கிய தமிழ்ச் செல்வர்களுக்கு மிகுந்த நன்றி பாராட்டுகின்றேன்.

மேற்கண்ட இரு நூற்களின் மூலம் தமிழ் மாணவர்கள் தமிழ் நூற்களுக்குச் செம்மையான விளக்கம் எழுதித் தமிழ் நாட்டாரின் கண்களை விழிக்கச் செய்வார்களாயின் தமிழ் மக்கள் யாவரும் உண்மையான கல்வி முறையில் ஈடுபட்டு இன்பமும் அமைதியும் அடைவார்கள் என நினைக்கிறேன்.

7—1—1940. ஆக்கியோன்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	பாடலில 4	பஞுகய	பங்கய
4	2-வது பாரா 1	வீற்றிககும	வீற்றிருக்கும்

இதே ஆசிரியரால் இயற்றப் பட்ட வேறு நூல்கள்

1. **தொல்காப்பியம் சொல்லதிகார விளக்கம்**

   விலை ரூ. 1-8-0

2. **தமிழ் நூல் விளக்கு — முதற்பாகம்**

   விலை ரூ. 2-0-0

தமிழ் நூல் விளக்கு முதற்பாகத்தைப்பற்றி பல்லாவரம் - மறை மலையடிகள் கருத்து: “ஆங்கில மொழிப் புலமை வாய்ந்தார் தங்களைப்போல் தமிழ்ப் புலமையும் வாய்ந்து தங்களைப்போற் புதிய முறையில் ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிடுவாராயின் நம் தமிழ் நாடு விரைவில் முன்னேற்றமடையும். தங்கள் நூலை ஊன்றிப்பயில விழைகின்றேன்.”

கபிலர்

என்னுடைய தமிழ்நூல் விளக்கு என்ற நூலில் கபிலர் இயற்றிய சாங்கிய நூலைத் தென்கலை என்றேன். தென்கலைக்கு ஆசிரியராயிருந்த கபிலமுனியே தக்ஷிணாமூர்த்தி என்னும் சிறப்புப் பெயர் பெற்ற ஆசிரியராயிருந்திருக்க வேண்டும். மார்க்கண்டேன் என்ற முனியும் தக்ஷிணாமூர்த்தியையே குறித்திருக்கலாம். இவ்வுண்மைகளை அநுமானிக்கக்கூடிய குறிப்புகள் அடியில் எழுதப்படுகின்றன.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் 16-ம் படலம் ஆகிய வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்த படலத்தில் அரபத்த முனிவனால் தூண்டப்பட்டு அவனுடன் வந்த முனிவர்களுக்குக் காட்சி கொடுப்பதற்காக மதுரையில் திருக்கோயிலில் ஒரு ஆல மரத்தடியில் தக்ஷிணாமூர்த்திக் கோலத்துடன் சிவபிரான் வீற்றிருந்தார் என்று சொல்கிற கட்டத்தில் அடியிற்கண்ட பாட்டுக்கள் காணப்படுகின்றன.

சீதளப் பளிக்கு மேனியும் பளிக்குச்
  செழுமலை பதித்த துப் பன்ன,
பாதமும் செவ்வாய் மலருமுக் கண்ணும்
  பங்கயச் செங்கரம் நான்கும்
வேதபுத்தகமும் அமுதகும் பமுந்தன்
  விழிமணி வடமுமெய்ஞ்ஞான
போத முத்திரையும்[1] தரித்ததோர் தனிமைப்
  போதன் முன் தாழ்ந்தெழுந் தேத்தார். (பாடல் 14)

1. காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குணம் நீங்கி அடைந்த ஞான போதத்தைக் கைவிரல்களை மடக்கிக் குறித்த அடையாளம்.

வடநிழல் அமர்ந்த மறை முதல் மேதா
மனு[1] எழுத்திருபதும இரண்டும்
திடமுற அரபத்தனற்ஞல் தெளிந்து,
தேள்[2] நிறை மதிமுதல[3] அடைவிற
படுமதி அளவும தருப்பணம ஓமம
பார்ப்பன உணடிமுப்போதும,
அடைவுற நுவன்று நோற்கு மாதவர் முன
அருமறைப்பொருள் வெளிவரும ஆல (பாடல் 15)

மேற்சொன்ன பாடலகளில் இரணடாவதில் காணப்படும் மேதாமனு எனற வடமொழி மந்திரம் இருபத்திரண்டு வாக்கியங்களால ஆக்கப்பட்டிருப்பதாகச் சொலலப்படுகிறது. மேதா எனறு பேருடைய 22 மநதிரத தொகுதி என்பது கருதது. மேற்படி படலம 4வது பாடலில் கூறப்பட்ட 'இருள்மலவலி[4] வெனற அரபத்தன எனனும் முனிவன் மற்ற முனிவர்களுக்கு இமமந்திரததை உபதேசித்ததாக இந்த இரணடாம பாடலில் கூறபபடுகிறது.

தக்ஷிணமூர்த்தி உபநிஷதம்.

இனி A. மகா தேவசாஸதிரியால பதிப்பிக்கபபட்டவையும் சிறு உபநிஷததுககள் எனற பேருடையவையுமான தொகுதிகளில் இரணடாவது தொகுதியில தக்ஷிணமூர்ததி ஸ்தோதரம் தக்ஷிணமூரததி உபநிஷதம எனறு இரண்டு நூல்கள காணப்படுகினறன. அவற்றில் தக்ஷிணமூர்த்தி

---

2. ஞானமந்திரம. 3 கார்ததிகை 4 அடுததுவரும் நிறைமதி அல்லது பௌர்ணமி.

1. இருள்மலவலி வென்றவன் என்பது மருள் நீக்கியார் எனவும் கூறப்படலாம்.

உபநிஷதம் என்பது யாரால் இயற்றப்பட்டது என்று கூறப்படவில்லை; எக்காலத்துள்ளது என்றும் தெரியவில்லை.

இந்த உபநிஷத்தில் சநகா முதலிய முனிவர்க்கு மார்க்கண்டேய முனியால் ஒரு ஆலமரத்தின் அடியில் பரமரகசியமான சிவ தத்வ ஞானம் உபதேசிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வுபதேசம் இரண்டு வினாக்களுக்கு விடைகளாகக் கூறப்படுகிறது. முதலாவது விடையில் 5 மந்திரங்கள் காணப்படுகின்றன. இவை தக்ஷிணா மூர்த்தியை இஷ்டதேவதையாகக் குறிப்பிடுகின்றன. முதல் நாலு மந்திரங்கள் பிரமாவை மந்திரம் ஆக்கிய ரிஷியாகக்கொண்டன; 5-வது, மந்திரம் விஷ்ணுவை மந்திரம் ஆக்கிய ரிஷியாகக் கொண்டது. முதல் நாலு மந்திரங்கள் மேதா தக்ஷிணா மூர்த்திமந்திரங்கள் எனக் கூறப்படுகின்றன.

இதிலிருந்து தக்ஷிணாமூர்த்தி சம்பந்தப்பட்ட மந்திரத்திற்கு ஆரிய மொழியில் மேதாமந்திரம் என்று பேர் இட்டதாகத் தெரிகிறது. இந்த மேதாமந்திரங்களை உபதேசித்த முனி மார்க்கண்டேயன் என்று உபநிஷத்தில் அவதாரிகையில் கூறப்படுகிறது.

இரண்டாவது விடையின் மூன்றாவது சுலோகத்தில் இம்முனி மார்க்கண்டுஜன் எனப்படுகிறார். மார்க்கண்டுஜன் என்றால் மார்கண்டு என்ற முனிபெற்ற புதல்வர் என்பது பொருள்.

இனி கந்தபுராணத்தில் இரண்டாவது காண்டமான அசுரகாண்டத்தில் ஐந்தாவதான மார்க்கண்டேய படலத்தில்[1] மார்கண்டன் மிருககண்டுயன் எனத்திருமாலால் நாம

1. 6-வதுபாடல்.

காரணம் பெற்றதாகக் கூறப்படுகின்றன. கண்டூயம் என்றால், தினவு அல்லது சொரி. இப்படலம் 2வது பாடலில் இம முனி நோற்கும் காலையில் மரை, கடமை முதலிய விலங்குகள் தத்தம உடமபில ஏற்பட்ட தினவுநோயைப் போக்கக்கருதி அம்முனி உடம்பில தம உடமபுகளை உராசிபபோயின எனக் கூறப்படுகிறது. ஆனதால மிருககண்டூயன் எனப பேர் வந்தது எனபபடுகிறது. இககாரணததின நிமிததம் இம் முனிமகன் மார்ககணடன் எனப்பட்டான என்றும கூறப படுகிறது. மிருககண்டூயன் என்பதில் மிருகம் எனபது முனி யினுடைய உடம்பில் உராய்ந்த மிருகததைக் குறிக்கும். ஆனால மிருகண்டுஜன என்று தக்ஷிண மூாததி உபநிஷத தில் பிரயோகிககப்பட்ட சொல்லிலுளள மிரு எனபது எமனைக்குறிககும. மேல் திருவிளையாடற்புராணததில கூறப் பட்ட மேதாமனுவை உபதேசிதத அரபததன இருள்மலவலி யென்றவன் எனப்பட்டான எனபதைக கவனிததால மிரு கண்டுஜன என்பதே நேர்பதமாகத தெரிகிறது. மிரு ஆகிய அஞ்ஞான இருள்மலததைக கணடிததவன் அல்லது சேதிததவன் புதல்வன் எனபது இதன் கருத்து. ஆதலால் மார்க்கண்டேய படலததிலுள்ள புராணக் கதை நேரான தன்று. கதையில மார்ககணடன் எமனை வென்றன எனக் கூறுவதால் மிருகண்டுஜன என்பதே நேரானபதம்.

தக்ஷிணமூர்ததி வீற்றிருககும ஆலமரததின் அடியில் மேதா மந்திரததை அரபததன் முனிவர்களுக்கு உபதேசித தான் என்று தமிழ்ப் புராணததிலும், மார்ககண்டன் முனி வர்களுககு உபதேசிததான எனறு உபநிஷததிலும கூறப பட்டிருப்பதால தமிழ்ப்புராணததில் கூறப்பட்ட அரபத் தன் மாாக்கணடன எனவே கருதபபட்டான் எனக்கொள்ள வேண்டியிருககிறது. அரபத்தன் என்றால சிவபக்தன். கதா

உபநிஷத்தில நசிகேதன் என்னும இளங்குழந்தைக்கு மெய்ப் பொருள் நுட்பத்தை விளககிய இறைவனின பேராகக் கூறப் படும மிருத்யு (=சாவு=எமன்) என்னும் சஙகேதபதமும் மிருதயுகணடன் அலலது மிருகணடன எனனும மொழியின் சுருககப பெயர் அலலது **கடைசிக் கூறு சிதைந்த பெயர்.**

இருபததிரணடு மந்திர சுலோகமுடைய இம்மேதா மந் திரம எது என்பது கேளவி.

கபிலருடைய மூல சாங்கியக கொள்கைகளைககொண்ட வடமொழி நூலகள் பிரதானமாக மூவகையாகச காணபபடு கினறன. ஒனறு ஆறு அததியாயஙகளகொணட சாஙகிய பிரவசன சூததிரம; இரணடாவது சஷ்டி தந்திரம் எனப பேர் பெற்றதும் 70 சுலோகஙகள கொணடதுமான சாங்கிய காரிகை; மூன்றுவது 22 சுலோகஙகளகொணட தத்துவ சமாசம்.

மேறசொனன மூனறு நூலகளில தததுவ சமாசமே திருவிளையாடற் புராணததிற சுடடபபடட மேதாமந்திரம என நாம் கருதுவதற்கு இடமிருககிறது.

ஈ—ூகிய நூலின முககிய உபதேசமானது முககுண முடைய பாச நிலை அலலது பிராகிருத நிலையையும மோக்ஷ நிலையாகிய புருஷ நிலையையும பேதிததுக் காணபதே விவேக நிலை அலலது முத்தி நிலை எனக கூறுகிறது. இவவுணமை தான மாாக்கணடன கணட உணமை என கநதபுராணம் மார்க்கணடேய படலததில சொலலபபடுகிறது. அபபடல 242ம் பாடல அடியிறகணடபடி இருககிறது.

எதம்தீர் சுடர்தனனையும எணணும ஐம
பூதம தன்னையும், போதிகன தனனையும

பேதம் செய்வர் பிறப்பு ஒழிந்தோா ; அவா
பாதம சோதல பாபதம சோவதே.

இப்பாட்டில் போதிகன்[1] (தி. தகர வர்க்கததில் நாலா வது எழுதது) என்பது சாங்கிய நூலின சஙகேதபதமான புருஷனைக குறிககும. ஆனால இபபாட்டல பதஞ்சலி முனி வன இயற்றிய நூலையும சைவசிததாநத நூலையும் அனுசரி தது போதிகனுகிய புருஷனுககுப பாசநிலை அலலதுகுண [2] பந்தம நீஙகித துரியநிலை அலலது ஞானநிலை கைகூடுவது ஏதமாகிய மும்மலம தீாககும பேராணடவனுகிய ஞானச சுடரின் அருளின நிமிததம எனககூறுகிறது. ஆயினும் சாங்கிய நூலிற்குரிய (பாசமுததி) பேதம எனும சஙகேதச சொல வழஙகப்படுவது கவனிககததககது. பேதம என்ற சொல இரு பொருள அவாவுமே ஒழிய முபபொருள் அவா வாது. முபபொருள கொணட சைவசிததாந்தம தன் ஆதி நூலாகிய காபில சாஙகியததின சஙகேதச சொலலைத திரிபு கருததுடன எடுததுககொளளுகிறது : தகூஷிணுமூாததி உபநிஷததிலும ஏகானம பகூஷவாதியாகிய சஙகராசாரி யாரின கொளகைககு ஏற்ப மாாககணடன முகதி அடைவ தற்கு முநதிய நிலையானது மோகததினுற் பிறநத விவேகநிலை என்றும் மாாககணடனுடைய எமபயம துவிதபயம் என்றும கூறபபடுகிறது.[3] ஆயினும சிவஞான சிததியாா

---

1 பேரகாரதியில் பௌதிகன் (தி தகரவாககததில முதலா வது) என்று பூத சமபநதமுடையது எனப பொருளபடும்படி காட்டி யிருப்பது தவறு

2. குணம = பாசம = கயிறு மிருதயுவாகிய எமனுடைய பாசம் இககயிறு தான்.

3. இப்பாகத்திற்குளள இஙகிலீஷ மொழிபெயாப்புத் தெளி வன்று.

சுபக்கம் எட்டாஞ் சூத்திரம் 12வது பாடலிற் கூறப்பட்ட படி சாங்கியரின் முகதிநிலையைக் குறிக்கும் விவேகம் என்னும் பதத்தை உபநிஷத்தில் பந்தமாகக் கருதப்பட்ட துவிதம் என்பதன் பரியாயப் பெயராகக் காட்டியிருக்கிறது.

கந்தபுராணமும் தக்ஷிணாமூர்த்தி உபநிஷதமும் பேதம், விவேகம் என்ற சாங்கிய நூற் சங்கேத பதங்களை முறையே அவற்றின் ஆசிரியர்களுக்குத் தோன்றியவாறு திரிபொருளில் ஆட்சி செய்திருப்பதால் இவ்விரு ஆசிரியர்களும் சாங்கிய நூலை உடகொண்டே அதை எதிர்த்துத் தங்கள் முடிவுகளை உணராதிருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாய் விளங்குகிறது.

இனி உபநிஷத்திலும் திருவிளையாடற் புராணத்திலும் சுட்டப்பட்ட மேதாமந்திரம் மேலே காட்டியபடி சாங்கிய நூலாகிய தத்துவ சமாசமாயிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.

ஆசுரியே மார்க்கண்டன்.

ஆசுரி என்பான் கபிலமுனியின் மாணாக்கன். ஆசுரி என்பது வட மொழியாகக் கருதப்பட்டால் வைதிகத்திற்குரிய ஒரு மொழியாகக் கருதப்படும். வெட்டுமகருவி என்பது இதன் பொருள். தமிழ் மொழியாகக் கருதப்பட்டால் குற்றத்தை உரித்தவன் அல்லது நீக்கியவன் என்பது பொருள். திருநாவுக்கரசின் மற்றொரு பெயராகிய மருணீக்கியார் என்பது ஆசுரிஎன்ற கருத்தைத் தருகிறது. மார்க்கண்டன் என்றால் மால் அல்லது மயக்கத்தைக் கண்டித்தவன் என்பப் பொருள்படும். திருமாலால் இப்பெயர் மார்க்கண்டனின் தந்தை மிருகண்டுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கந்தபுராணம் கூறுகிறது.

ஆகவே மேதாமனுவிற்குரிய தக்ஷிணுமூாத்தி கபில முனியின் மாறு ரூபம என நாம் யூசிக்கலாம. கபிலன் என்பான் ஆராதனுடைய சிஷயன எனபபடுகிறுன. ஆராதன என்பது தமிழச சொலலாயக கருதப்படடால ஆராயநதவன் எனற சொலலின சிதைவு எனக கூறலாம. முழுமையும் தெரிநதவன எனபது கருதது. திருவிளையாடற புராணம இடைககாடன பிணககுத தீாதத படலததில கபிலனுககு அவன இறைவனுகிய ஆராதன குணததை ஏற்றி முழுமையும உணாநதோன எனபபடுவது கவனிககததகுவது.

இனிசசாஙகிய நூல ஒனறு ஆதியில தமிழில இருநது பின மறைநது போனதாகத தெரிகிறது. இதனுடைய உணமையை ஆராயவோம.

குறிஞ்சிப் பாட்டு.

கபிலா தமிழில பல பாடலகள இயறறியிருபபதாகச சொல்லபபடுகிறது. அவறறுள ஒனறு பததுப்பாட்டில ஒன்றுன குறிஞசிப பாடடு. இந்நூல பததுபபாட்டில எட டாவதாகக கோககபபடடிருககிறது. குறிஞசிபபாடடின கடைசிவரியை அடுததுககீழே " ஆரிய அரசன பிரகததனைத தமிழ அறிவிததறகுக கபிலா பாடிய குறிஞசிப பாடடு முற்றிறறு." எனககாணபபடுகிறது. இஙகே பிரகத்தன எந நாடடிறகு அரசன எனககுறிபபிடாதது கவனிககததககது. சஙகச் செயயுளகளில கபிலரால பாடபபட்ட அரசா யாவருமு தமிழ மனனாகள எனபது பொது உணமை. இத தொடரில " தமிழ " எனற சொலலின பொருள இனனதெனப் புலபபடவிலலை. இததொடாககுப பினனுற் காணபபடும் இரணடு வெணபாககளில இரணடாவதில இந்நூல

குறிஞ்சிககுணம எனபபடுகிறது. குணம எனபது சாங்கிய நூலிற்குரிய சங்கேத மொழி. இவவெணபாவில இநநூலானது அறம பொருள இனபததைப போற்றிய புணைநத பொருளையுடையது எனக கூறபபடுகிறது. ஆகவே சததவம, ரஜஸ, தமஸ எனற முககுணஙகளுககு நேராகப பரிமேலழகரால கூறபபடுகிற முபபாற பொருளும இநநூலிற் கூறப்பட்டதாகக கருதபபடுகிறது. ஆனதால லௌகிக தாமம் மோக்ஷதர்மம ஆகிய இருவகைத தாமங்களின இயல்புகளையும இநநூல அறிவிககிறது எனபபடுகிறது. நூலுககுள் மோக்ஷ இயலபுநனறுயக கூறபபடாததாலும ஆரிய மொழியிலுளள நூலகளைக கறறவனுககுத தமிழ நாட்டில பயிலபபடும மோக்ஷ தாமததை இநநூல அறிவிககககூடிய இயல்புடையதா யில்லாததாலும கபிலா இயற்றிய மோக்ஷ நூல தமிழரால இழககபபடடபின, கபிலா இயறறிய இந்நூலில அவவிழககபபடட நூலிறகுரிய குணம ஏறறிச சொலலப்பட்டிருககிறது என நாம யூகிககவேணடும.

இறையனார் களவியல்.

இநநூறபெயரில இறையனா எனபது குரு எனக கருதபபடு தரும. இககுரு தக்ஷிணாமூாததியாயததான கருதபபட்டிருககவேணடும. தக்ஷிணாமூாததிககுரிய மேதாமனுவிறகு நேரான சாஙகிய நூலகள மூனறு வடமொழியில இருககினறன. திருவிளையாடறபுராணம 54வது படலமாகிய கீரனுககு இலககணம உபதேசிதத படலததில தமிழப பொருளி லககணததிற்கு ஆதிநூல ஒனறு இருநததெனறும அது தொகைநூல, வகைநூல, விரி நூல எனறு மூனறு விதமாகக சாணபபடடதெனறும தெரிகிறது. நககீரனுக்கு இமமூன்று நூலகளையும உரையுடன் அகததியன் உபதேசித்

தான எனககூறபபடுகிறது. இமமூனறு நூல்கள் சுவை எனப்பரஞ்சோதி திருவிளையாடலில காட்டபபடவில்லை." எனினும் இறையனுர்களவியல் என்னும நூல் வடமொழியி லுள்ள வகை நூலாகிய சாங்கியகாரிகையோடு வெளி அமைப் பில் ஒருவாறு இணஙகுகிறது. சாஙகிய நூலிற்கு வட மொழியில சஷ்டிதநதிரம அலலது அறுபது விஷயததநதிரம எனற ஒரு பெயா உணடு. சஷ்டிதந்திரம எனபதற்கு அறு பது விஷயததநதிரம என பாஷயககாராகள பொருளகூறு கின்றனர். உணமையில வட மொழியில 60° சூததிர முண்டய ஒரு சாஙகிய நூல இருந்திருககலாம. அநநூல மறைநது போய 70 சூததிரமுடைய சாங்கியகாரிகை இப்போ இருபபதால சஷ்டிதநதிரம என்ற போ இநநூலு க்கு இணஙகவிலலை எனபதைக கவனிதது இதெதாடாக்கு அறுபது விஷயநூல எனறு உரைகாரா பேரிட்டு அககருத துக கிசைய சாஙகியநூற பொருளகளை அறுபது வகையாகப பிரிவு செயதிருககினறனர் எனத தெரிகிறது. இபபோ துள்ள சாஙகிய காரிகைககு சப்ததி அலலது எழுபது சூத திரக கோவை எனறு பெயா. ஆனல் 72 சுலோகஙகள் இருக்கினறன.

இறையனுர் களவியலிலும அறுபது சூததிரங்கள் உள. நூலிற் குரிய சூததிரஙகள ஆதியில மோக்ஷ நூலிற்குரிய விஷயஙகளைக கூறி யிருககவேணடும் என நூலின உரையி லிருந்து தெரிகிறது. அசசூததிரஙகள வட மொழியில மொழிபெயர்ககபபட்டபின தமிழ நாட்டில மறைந்துபோன தாகததெரிகிறது. அமமோக்ஷ நூலிறகுப பதிலாக இப போதுள்ள காமநூலான இறையனுர்களவியல் புனையப்பட் டிருக்கிறது.

ஆஙகில ஆசிரியா கேயிதஎன்பா எழுதிய சாஙகியம் என்றநூலில பாஞ்சராததிர சமயசசார்பான அகிபபுதனியா என்ற சிறுநூலில் சாஙகியம என்ற நூல ஒன்று 2 மண டலமாகவும 60 பிரிவாகவும காணபபடடதெனறும முதல் மணடலததில 32 பிரிவும இரணடாவது மணடலததில 28 பிரிவும இருநதன எனறும கூறபபடுகிறது. நமமுடைய இறையனாரகளவியலிலும களவியல என்ற அதிகாரம 33 சூத்திரம உடையதாகவும கற்பியல் என்ற அதிகாரம் 27 அதிகாரம் உடையதாகவும காணபபடுகிறது. மேற்படி கேயித ஆசிரியரின் நூலால ஜைன சமபிரதாயபபடி சஷ்டி தந்திரம என்ற நூல விருஷகணா என்பவரால எழுதபபட்டிருநததாகக கூறபபடுகிறது. விருஷகணர் எனபவர் ஆதி தீரததஙகரராகிய ரிஷபதேவரே. தமிழ மரபினபடி நந்தி தேவர் எனபவர்க்கு ரிஷபதேவா நேரானவர். திருமூலர்வர லாற்றுடன பசுமேயககும தொழில் இணைக்கபபட்டிருபபதா லும விசாரதருமராகிய சணடேசுரரும பசுமேய்ததாகச சொலலபபடுகிறபடியாலும திருமூலரும சணடே சுரரும நநதிதேவரின மாறுருபமே. ஆகவே திருமூலர் திருமந் திரததிற்கு முனனூல அநநூலின பொருள விளககிய இறையனார் களவியல ஒனறு ஆதியில தமிழில இருந்திருகக வேணடும எனத தெரிகிறது. சாஙகிய நூறபோனற நூலு க்கு பபிரகிருதியாகிய பந்த மார்ககம, மோக்ஷ மார்ககமாகிய ஸ்திரமாரககம என இரணடு பிரிவுகள் ஏற்பட்டிருக்கலாம. தமிழ களவியலில இபபோ இரணடு அதிகாரஙகள் காணப படுகினறன. அவை களவியல, கற்பியல என்பன. ஞானம் கைகூடாத பிராகிருத நிலையில ஆன்மாவானது காமம வெகுளி மயககம என முக்குணவசப்படுவதால் அவ்வொழுக் கத்துக்குக் களவியல் எனப்பேர் வாய்ந்திருக்கலாம்: மோக்ஷ

இயல் கற்போல நிலைப்பதால் கற்பியல் என இரண்டாவது இயலுக்குப் பேர் அமைந்திருக்கலாம். புருஷபிரகிருதி ஆகிய இருபொருள்களைப் பிரித்து உணர்வதே மோக்ஷம் எனப்படுவதால் களவு, கற்பு என்பனவற்றில் கற்பானது பிரிவு என்று குறளில் பொருளமைந்திருத்தலும் நேரிதே. காதல் மணத்திற்குப் பின் கூடிவாழ வேண்டிய காலத்திற்குப் பிரிவு என முன்னோர் பேரிட்டார் என்பது அசம்பாவிதமே. "அளவறிந்தார் நெஞ் சத்தறம்போல நிற்கும், களவறிந்தார் நெஞ்சிற்கரவு" என்ற குறளும் துறவற இயலில் அமைந்தது நேரிதே. அளவு என்பது பொருள்களின் தன்மை உணர்ந்து மோக்ஷ நிலை அடையவிரும்புதல். களவு என்பது பந்தநிலை. உயர்ந்த பொருளுள்ள இச்சங்கேத மொழிகள் பொருளதிகாரத்தில் பிறழ்ச்சியுணர்வு வயத்தால் பொருள் மாற்றப்பட்டு விட்டன. இப்பிறழ்ச்சி யுணர்வை அனுசரித்தே குறள் காமத்துப் பால் பிரிவுகளுக்குப் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இனி இறையனார் களவியல் உரையில் அவ்வுரையானது உருத்திர சன்மரால் இயற்றப்பட்டதென்று அக்காலத்து ஆசிரியர் சிலர்கொண்டதாகக் கூறப்படுகிறது. நூலாசிரியராகிய இறையனார் உருத்திர சன்மனாயிருந்திருக்கலாம் என ஊகிக்க இக்கொள்கை இடந்தருகிறது.

பரிபாடலில் 3ம் பாடலின் உரையில் 7ம் வரியின் பதினொரு கபிலரும் என்பதில் கபிலர் என்பார் உருத்திரர் எனக் கூறப்படுகிறது. ஆகவே இறையனார் களவியலின் ஆசிரியர் உண்மையில் கபிலராயிருந்திருக்கவேண்டும் என்றும் அவரியற்றிய உண்மை ரூபமுள்ள களவியல் மாற்றப்பட்டுவிட்டது எனவும் தெரிகிறது. கபிலர் முனி (மௌனம் அல்லது

பேசாமை உடையவர்) யானபடியால ஊமை எனப்பட்டார். நிர்வாணா அல்லது வாணியரான தக்ஷிணாமூர்த்தி தங்கி யிருந்த ஆலமரத்தடியில மேதா மந்திரம முனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்டபடியால உருத்திர சன்மர், நிர்வாணர் என்ற பொருளில வாணியர் எனப்பட்டார். சர்மர் என்பது சிரமணர் அல்லது சமணா என்பதன மருவு; சந்நியாசி அல்லது துறவி என்பது பொருள.

களவியல உரையில பாயிரப் பகுதியில நூலின்பயன் விளக்குமிடத்து இந்நூல வீடு பேறுபயக்கும் என்றும அவ் வீடு பேறு முக்குணக்கட்டாகிய மக்கட்பாடு என்ற லௌகி கத் தன்மையானும வலியானும் அழகானும செல்வத்தானும் பெறலாவதன்று என்றும தவஞ் செய்வார்க்குப் பெறலாம் என்றும அவ்வீடானது பிறப்புப பிணி மூப்புச் சாக்காடு அவலக்கவலை முதலிய நீங்கிய பேரின்ப வெள்ளம என்றும் இது தான் பயன எனக் கேட்ட மாணாக்கன காதல் வேட்கை ஒழிந்து வீடு பேறு அவாவி தவமும ஞானமும் புரிந்து வீடுபெறுவான் என்றும கூறப்படுகிறது. இவ்வாறு காணப் பட்ட உரைப்பாகத்திலிருந்து ஆதியில இருந்த நிலைமையில் இந்நூல் இப்பொழுது அமைந்திருக்கவில்லை என்றும சாங் கிய நூல் அல்லது யோக நூலபோல் விஷயங்களை இந்நூல் ஆதியில உணர்த்தியிருக்கவேண்டும என்றும நாம் யூகிக்கும் படி இருக்கிறது.

நூல் மாற்றப்பட்டபின உரையும் மாற்றப்பட்டிருக்க வேண்டும். பாயிரப பகுதி உரையானது நூலிற்கு முந்திய பாகத்தைச் சோந்ததாதலால நூல எழுதுவோர பாயிரப் பகுதி உரையும சோத்து எழுதி விட்டிட்டார்கள். அதனுல் தான பாயிரத்தில நாம எதிர்பாராததபடி நூலில் ஞானப்

பால் [1] ஊட்டப்படாமல பிறவிககடல கடததறகுரிய ஞானத தோணிக்குப [2] பதிலாக மருணீககியாா கடலில அமிழும பொருட்டுப பகைவரால கொடுககபபட்ட கறஞேணிபோன்ற இணைவிழைசசு (= காமானுபவம) நஞசு ஊட்டபபடுகினறது.

ஞான சம்பந்தர்

கபிலா முக்குணததின தன்மையை ஆதியில உபதேசித்தவரானபடியால அவர் கௌணியர் கோததிரததைத தொடங்கினவராகக் கருதப்பட்டிருககவேணடும. ஆனதால தான கபிலரைபபோல் சராசரஙகள் முழுமையினிடததும கருணை கொண்டவரும அயல வழக்கு ஒழிதது தமிழ வழக்கை நிலை நிறுததப பிறந்தவருமாகிய ஞானசமபந்தர் கவுணியர் (குணி நூலைப பினபறறியவர்) கோததிரததிற் பிறந்தாா என்றும மோக்ஷ இனபம் கொடுககும ஞானப் பால்[3] உண்டார் எனறும (பிறவிக் கடல கடததும் தோணிக் குறிய) தோணி[4] யபபர் என நாமம பூணட சீகாழிப் பெருமானுல ஆளபபட்டார் எனறும கதை ஏற்பட நியாய மிருநதது.

தமிழில் தொகை, வகை, விரி நூல்கள்.

சாஙகிய நூல் சமபந்தமாக வடமொழியில மூனறு நூலகள் ஏற்பட்டிருககின்றன. தததுவ சமாசம தொகை நூல;

1 சாங்கிய காரிகைக்குக் கௌடபாதா எழுதிய நூற்பாயிர உரையில் கபிலர் செய்த நூல மானுஷய பயஸ்(= ஞானததன்மையுடையபால்) எனப்படுகிறது.

2. கௌடபாதா உரையில இந்நூல பிறவிக்கடல் கடத்தும எனப்படுகிறது.

3, 4 இக்கருததுக்ள் வடமொழி சாஙகிய நூலின் கௌடபாதர் உரைப் பாயிரத்தில் காணப்படுகிறது.

இது திருததொண்டாத தொகைக்கு நேரானது. சாங்கிய காரிகை வகை நூல்; இது திருததொண்டர் அந்தாதிககு நேரானது. சாங்கிய பிரவசன சூததிரம (ஆறங்கமும் 526 சூததிரமும்) பெரிய புராணததிற்கு நேர்.

தொகை வகை விரி என்ற பாகுபாடே கபில சாங்கிய நூல் அமைதியிலிருந்து தமிழிலக்கணததிற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகததெரிகிறது.

கபிலரின் ஆதிநூல் வடமொழியாளரரால் ஆதரிக்கபடாமற் போனதன் காரணம்

கபிலரின் இரண்டு சிறந்த கொளகைகளே அவா நூல் சிணிதக்கப் பட்டதற்குக் காரணம. சாங்கிய காரிகையில் 53வது சுலோகததில ஸதூலப பொருள படைபபு வகை கூறபபடுகிறது. படைபபு மூனறு வகையாகக் பிரிககப்படுகிறது. அஷடவிகலப தேவாகள, திர்யக (விலங்கு முதலிய—தாவரம அடஙக) பஞச விதம, மானுஷயம ஏகவிதம ஆக மூவகை காணப்படுகிறது. இதில் மானுஷ்யம ஏகவிதம் எனற கொளகை வேதததிற்கும ஸ்மிருதிககும விரோதமானது. ஆதலால சாஙகிய நூலினபண வடமொழியாளர்க்கு வெறுப்பு ஏற்பட நியாயம இருககிறது. தமிழில் கபிலா அகவல் எனறு வழஙகப்படுகிற நூல ஒனறு காணப்படுகிறது. இது கபிலரால ஆககபபட்டது எனபதறகு ஆதாரம் இல்லை. ஆனால் அகவலைப் புதிதாக ஆககியவா கபிலர் நூலைக கறறே தான அவா கருததைதத தன நூலில் கொணடு வரமுயற்சிததிருககிறாா எனறு தெரிகிறது.

இனியொரு சிறநத கொளகை சாஙகிய காரிகை 51-வது. சுலோகத்தில் காணபபடுகிறது. இஙகே எண வகைச் சித்தி

கள் கூறப்படுகின்றன. அவையாவன: யூகம், சபதம், அத்யயனம், மூவகைத் துக்கம்[1] நிவர்த்தி, சுகிருத பிராப்தி (தோழரை அடைதல்; அல்லது நண்பரைப் பெறுதல்) தானம் ஆக எட்டு. சபதம் என்பது கேள்வி, அத்யயனம் என்பது கல்வி; யூகம் என்பது அறிவுடைமை; சுகிருத பிராப்தி என்பது நல்லோரிணக்கம். இங்கே தொண்டர் புத்திரர், சன்மார்க்கர் (லயமடைந்தவர்) ஆகிய மூவரின் நிலைமை கூறப்படவில்லை.

குடியரசுக்குள்ள சமத்துவம் மட்டும் கூறி, அரசனுக்குப் பணிதலாகிய ஒழுக்கம் கூறப்படவில்லை. முத்தியில் வகுப்புக் கட்டுப்பாடு காணப்படவில்லை. ஆதலால் நால்வகை வருண தாமம் சிறந்ததெனக் கொண்டாடும் வடமொழியாளர் இந்நூலை வெறுக்கும்படி ஏற்பட்டது.

கபிலரின் மூன்றாவது சிறந்த கொள்கை ஒன்று இங்கு சொல்லவேண்டியது அவசியம். பிரமாணம் மூன்று எனக் கொள்வதில் பிரத்யக்ஷம், அநுமானம், ஆப்த வசனம் என்று வகை காட்டப்படுகிறது. ஆப்த வசனம் என்றால் மாணுக்கன் மாட்டு அன்புடைய முனிவன் வசனம் என்பது பொருள். ‘இன்சொல் (ஆல்) ஈரம் அளைஇப் படிறு இல வாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்” எனக் குறளில் ஆப்த வசனம் இன்னது எனக் குறிக்கப்படுகிறது. சாதி முறையைப் பிரதானமாகக் கொண்டாடும் வேதம் ஸ்மிருதி இரண்டும் ஆப்த வசனம் ஆகா எனக்காட்டியவாறு கவனிக்கத்தக்கது.

---

1 மூவகை துக்கம் எவை என்ற விஷயம் ஆதிநூற் கொள்கையிலிருந்து மாற்றப்பட்டதாகத் தெரிகிறது.

யாகத்தின் முறையானது அவிசுத்தி, க்ஷயம், அதிசயம் ஆகிய முக்குற்றம் உடையது என்றும் முக்குணம் நீங்கிய ஞான ஒழுக்கமே முத்திக்கு ஏது என்றும் கபிலர் உபதேசித்ததால் அவரும் அவர் நூலும் வெறுக்கப்பட்டனர். கபிலர்கொண்ட இரண்டு பொருள்களில் புருஷன் என்பது ஈசுரன் எனப்படும் என்று ஓரிடத்தில் கூறுகிறார்; அதாவது பிராகிருதகுணத்தை அடக்கி ஆள்பவர் என்பது கருத்து. பேராண்டவன் ஆகிய பொருள் இல்லை எனக்கூறவில்லை. கபிலர் எழுதியது தனக்கு மனதிற்பட்ட உண்மையானதால் பேராண்டவனைப்பற்றிப் பேசவில்லை. இக்காரணத்தால் பொய் மூலம் ஜனங்களை அடக்கியாளவேண்டும் என்ற அரசர் முதலியோரும் அவ்வரசரை அநுசரித்த புரோகிதர் முதலியோரும் சாங்கியத்தைப் பரவச்செய்ய ஒட்டாமற் செய்தனர்.

நக்கீரர்.

ஞானசக்ஷீரர் - ஞானப்பாலாகிய நூலின் ஆசிரியனாகிய கபிலரையே இப்பெயர் ஆதியில் குறித்திருக்கவேண்டும். பிற்காலத்தில் கபிலர் வேறு நக்கீரர் வேறு எனக்கருதப்பட்டுப் புராணக்கதைகள் எழுதப்பட்டும் சங்கச் செய்யுட்களில் ஆசிரியர் இன்னார் என அச்செய்யுட்கள் தோன்றிய காலத்துக்கு வெகுநாட் கழிந்து பிற்காலத்தில் குறித்து எழுதியதில் சரித்திர ஆராய்ச்சி யில்லாமல் பாட்டுக்களின் தலைப்பில் கபிலர் என்றும் நக்கீரர் என்றும் வரையப் பட்டிருக்க வேண்டும்.

திருவிளையாடற் புராணத்தில் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தில் 6வது பாடலில் கபிலன் முழுதுணர்ந்தவன் எனச்சிறப்பிக்கப் படுகிறான்: இடைக்காடன் கபிலனிடத்துக்கேண்மை கொண்டாடினவன் எனப்படுகி

ளுன். ஆதலால் பாண்டியனைத் தமிழில் கவிபாடி மகிழ்வித்து அவனிடம் பயன் பெறலாம் என முயன்றுன் எனப்படுகிறது. இதிலிருந்து கபிலன் தென்சொல்லாகிய தமிழை உரிமை மொழியாகவோ அபிமான மொழியாகவோ கொண்டவன் எனத் தெரிகிறது.

11-வது பாடலில் இடைக்காடன் பாடலைப் பாண்டியன் அவமதித்ததற்காகச் சிவபிரான் தன்னுடைய ஆலவாய்க் கோயிலை நீத்து வைகையாற்றிற்குத் தென்கரையிலுள்ள உத்தர ஆலவாயக் கோயிலுக்குப்போன விஷயம் சொல்லப்படுகிறது. இக்கட்டத்தில் பாண்டியனால் அவமதிக்கப்பட்ட இடைக்காடனையும் அவனுடைய தோழனாகிய கபிலனையும் மகிழ்விக்கும் பொருட்டுச் சிவபிரான் தன்னுடன் இருந்த சங்கத் தமிழ்ப்புலவோருடன் தன் ஆலயத்தைவிட்டார் எனக்கூறப்படுகிறது. இதிலிருந்து கபிலன் சிவபிரானின் தோழனாகக் கருதப்பட்டான் என்றும் சங்கப்புலவர்களும் அவ்வாறே சிவபிரான் தோழர்களாகக் கருதப்பட்டார்கள் என்றும் தெரிகிறது. முத்தி நிலையை வடமொழியாளர் வெறும் தனிமையாகிய கைவல்யம் என்று மட்டும் குறிப்பதை விலக்கிச் சாங்கிய நூலினகட் கூறப்பட்ட அஷ்ட சித்திகளில் ஒன்றான நட்புப்பேறு அல்லது சுகிர்த்துப் பிராப்தி என்ற இலக்கணத்தைப் பின்பற்றிக் கபிலரும் சங்கப்புலவர்களும் சிவபிரானுக்குத் தோழர்கள் எனப்படுகிறார்கள். இத் தோழமைதான் சாங்கிய ஞானத்தின் பயனானயோகம் (= கூடல்). இத்தோழமைக் கொள்கையை மாற்ற வருணு தாமக் கொள்கையுடைய வடமொழியாளர் நான்கு ஆஸ்ரமம் ஏற்படுத்தித் தாதமார்க்கம், கிரியா மார்க்கம், சகா மார்க்கம், சன்மார்க்கம் எனக்கற்பனை செய்தார்கள். “சார்புணர்ந்து

சார்புகெட ஒழுகின மற்றழிததுச, சார்தரா சார்தருநோய்"
என்ற குறளின உரையில் உணாவு ஞானம எனறும் ஒழுகல்
யோகம் எனறும் பொருள்கூறி ஞானததிற்குப பின்
யோகததை அடைவே வைததுப பரிமேலழகர் ஞானயோகங்
கள் என்ற தொடரை இருமடஙகுபிரயோகிககிறுர். இதன்
மூலம் அஷ்ட சித்திகள் சாஙகியநூலில சொல்லபபட்ட
வரிசையைப பரிமேலழகர் அனுசரிக்கிறுர் எனததெரிகிறது.
சாங்கியததில் அஷ்ட சிததிகளைக கூறுங்கால் ஞானததிற்
குரிய யூகம், சபதம, அதயயனம் மூனறையும் முதலிற்
சொலலி சுகிருத பிராபதி (= நலலோா இணககம), தானம்
ஆகிய ஒழுககஙகளை ா ற்றில வைத்திருககிறது.

புராணததில பிற்காலததில அளவை வேந்தனுகிய
கபிலனை அளகைவேந்தனை குபேரனுக மாற்றிக் குபேரன்
தோழன் எனபபடுகிறுன. இடைககாடன் பிணக்குத தீர்தத
படலத்தில் 26ம பாடலில் " யாம வந்து புக்கு உறைகுறி நம்
தோழன பூசிதத குறியதாகும " எனற தொடரில் தோழன
என்பது சந்தர்பபம் நோக்கக கபிலன் என்று பொருள்படு
கிறது ; உரையாசிரியா குபேரனைக குறித்ததாகப பொருள்
செய்கிறு:. பரஞ்சோதி முனிவரும சாங்கியநூலின மேன்
மையை அறிந்து கபிலனுககுச சிறபபுக்கொடுகக முயன்ற
போதிலும வடமொழியாளர் கட்டுககு உடபட்டுப பாடலில்
தங்கருததை உறுதியாயக் கூறுமல நெகிழ்ந்து சொல்லிக்
கொணடுபோகிறுா.

கீரனைககரையேற்றிய படலததில் 10வது பாடலில நக்
கீரன ஒழிநத சங்கபபுலவாகள கீரனுடைய பிழையைப
பொறுககுமபடி சிவபிரானை வேணடினுாகள் என்று சொல
கிற இடததில ' கபிலனும பரணனும முதலாகிய பாவலா

யாவரும சரணம எனறு அடிசார விழுந்து இரந்தார் எனப்படுகிறது. இங்கே கபிலனை முதலாக வைத்தது கவனிக்கத்தக்கது. கபிலனும நககீரனும ஒரே பொருளைக் குறிககினறன என்பது கருதிபபோலும திருதசொண்டர் புராண சாரததில பொய யடிமையில்லாத புலவா புராணததைக் சாரமாகச சொல்வதில் "பொய்யறியாக் கபிலரொடு பரணராதிப புலவோர்" என நக்கீராபேரை ஒழித்துக் கபிலர் பாணர் பேரைமட்டும் குறிபபிடபபட்டிருக்கிறது.

கபிலா தமிழில இயறறிய சாங்கிய நூலைக் கருதிப் பெரியபுராணததில மூாததி நாயனார் புராணததில அடியிற் கண்ட வசனங்கள எழுந்தனவாகத் தெரிகிறது.

"ஞாலம் அளந்த மேன்மைத தெயவததமிழும
தரும செவவி மணம செயயீரம்" (3ம் பாடல)

மும்மைபபுவனங்களின மிககதனறே அமமூதூர்
மெயமமைப பொருளாம தமிழ நூலின விளஙகு
வாயமைச்
செம்மைப பொருளும தருவாா திரு ஆல வாயில்
எம்மைப்பவம் தீாபபவர் சஙகம இருந்த தென்றல (7ம் பாடல)

கேளும துணையும முதற கேடில பதஙகள் எல்லாம
ஆளும பெருமான அடித்தாமரை அலலது இல்லார்.
(9ம பாடல்)

இங்கே கேளும் துணையும' எனபதில சாங்கிய நூலினுள்ள அஷ்ட சிததிகளில ஒனறான சுகிருத பிராபதி (நடபுபபேறு) என்றயோக நிலை சிறபபாக எடுததுச் சொலலபபடுகிறது. இககருதது நோககியே சுந்தரமூர்ததி நாயனா

சிவபிரானுகிய தமபிரானுககுத தோழா எனபபட்டார். இக்கருததறியாமல சுவாமி பரவை நாச்சியார் வீட்டிற்குத தூது சென்றூர் எனற புராணக்கதை புனையபபட்டிருககிறது. சாங்கிய நூற்கருததைப பினபறறி எழுநத தமபிரான தோழர் என்ற சிறப்புப பெயரின உணமைபபொருளை மறைககச சேரமான தோழர் எனற கருததில தம்பிரான் தோழர் என்று நாயனூர் கூறபபட்டார எனறு நமபுமபடி வேறு புராணக்கதை புனையப்பட்டிருககிறது. இககருததை மறைககவே வெள்ளானைசசருககததில சேரமான பெருமாள் தனனுடைய குதிரைமீது கைலாசததிற்கு வநதவரை வெளியே நிறுததிவிட்டுச சுநதரமூாததி நாயனுா தனியே சிவ பிரானிடம போய அவா உததரவு பெறறுபபின சேரமான் பெருமாளைச சிவபிரானிடம அழைததுசசெனறதாகப புனைநதுரை செயயபபட்டிருககிறது.

மேல் வியாசததில குறிபபிடப்பட்ட தததுவசமாசம சாஙகிய நூலகளில் ஆதிநூல எனறு மாகஸ முலலா தமமுடைய' இநதிய தததுவசாஸதிரததின் ஆறுதாசனம" எனற நூலில கூறியிருககிறூா. இநநூலில பெருமபாலும தததுவஙகள ஐந்தைநது வகையாக எடுததுககூறபபடுகிறது. ஆதலால் சைவாகள கொணடாடும் பஞசாக்ஷர மந்திரம இத தததுவ சமாசமாகததான இருக்கலாம என ஊகிகக இடம இருககிறது.

காபிலம்

புரபுசா கேயித எழுதிய சாங்கிய நூலில் 160வது பக்கததில **அநுபோகதுவார சூதரம்** என்ற ஜைன நூலில '**காவிலம — சட்டி சந்திரம**' எனற தொடர்வருவதாகச்

சொல்லப்படுகிறது. அதே புரபசா நூலில ஔபாதிக சூத்ரம் என்ற நூலில் ‘காவிலம — சங்கஜோகி’ என்ற தொடர் வருவதாகச் சொல்லபபடுகிறது.

சென்னை ராயப்பேட்டை முருகவேள் புததக சாலையில் ஈக்காடு இரததினவேலு முதலியாா விருததியுடன் பதிப பிககப படடிருககிற பரஞ்சோதி திருவிளையாடலில் தீாத்த விசேடம 20ம பாடலின உரையில காபிலம மந்திர ஸ்நானம போன்ற ஒருவகை ஸ்நானம எனககூறபபடுகிறது.

மேற்சொன்னதிலிருந்து கபிலர் எழுதிய சாங்கிய நூல் காபிலம என்ற பேருடன வழஙகியதாகத தெரிகிறது.

புராணக்காரர்கள் ‘காபிலம’ என்ற சொல்லைக் கபா லம, கபாலம, காபாலிகர் எனததிரிதது சிவபிரான் பிரமக பாலததைக கையில் வைததுக்கொணடு பிசசை எடுத்தான என்றும அக்கபாலம சிவபிரான கைவிட்டு நெகிழாது என றும திருமால் தனனிரததததைக கபாலததில் ஊற்றி அக கபாலம கீழவிழும்படி செய்தான எனறும கதை கட்டினார் கள். இககதைகளின கருததுககள் நாலாயிரத திவய பிரபந் தத்திலும தேவாரததிலும உணமைப பொருளாக எடுத் தாளபபடுகின்றன. வடமொழிப் புராணங்கள் இககதை களை முதலில பரவச்செயதன. இதனால் ஆர்ய மொழியில் பயில்வாரும தமிழ மொழியில பயிலவாரும ஆகிய தமிழ சமூகம முழுமையும வடநாட்டில உள்ள இந்திய சமூக முழுமையும மூடததில் அழுந்தியிருக்கிறார்கள்.

இனனும காபில மததைதப பின்பற்றித தககன யாகத தில் தேவர்களை அழிததாகச சொல்கிற வீரபததிரன என்ற சேயோனும, எச்சததனைக் கொன்றதாகச் சொல்லப

படுகிற சேய நலலூர் சண்டேசுரனும, ஆலமரததில் யாகத தைக் கண்டிதத ஆகமம என்ற நூலை உபதேசிததாகச சொலலப்படுகிற மார்க்கணடனும் நககீரனால புகழபபடடார கள் என்று கோபபபிரசாரம என்ற நூலின மூலமும திரு விளையாடற்புராணம கீரனைககரை யேற்றிய படலம 16ம பாடலின மூலமும தெரிகிறது.

இம்மாதிரியாக காமததிறகு விரோதம படைதத காபிலமாகிய சாங்கியததை அநுசரிதது எழுந்த புராணக கதைகளின உணமை யறியாமல கபிலனைப பொலலான் என்ற பேரால அழைததார்கள். இவவுணமை யெலலாம கண்ட மெயகணட தேவர் சிவஞான போதககாபபுச செயயு ளில ஞானததிற்கு மூல ஆசிரியனைப பொலலா என்றே தாமும் புறமததார் இடடபேரால வழங்கினா.

ஆதிரை

ஆதிரை எனபது ஆராதன எனபதன மாறுருபமா இருககலாம என எனனுடைய நூல தமிழ நூல விளககில கூறபபடடது. அவவாறு மாறுருபமாயிருககலாம எனபது சநதேகததிற்கு உரிததாயிருநதால அடியிற கணடவாறு யூகிககவும இடமுணடு.

ஆதி இறை என்ற தொடரே ஆதிரையாக மாறியிருகக லாம். ஆதி இறை எனபது சிததாநதததின முதல் ஆசிரி யனைக் குறிக்கும. இதைப பின்னால ஆதிரை நட்சததிரம எனககொணடு புராணக்கதை எழுதினாகள.

யாகததிறகு விரோதமான சணடேசுர நாயனா புரா ணததில யாகததைதத தர்மம என்று உணரும்படி அடியிற் கண்ட பாடல் அமைந்திருக்கிறது.

யாகம் நிலவும் சாலைதொறும் மறையோர்
ஈந்த அவியுணவின்,
பாகம நுகரவரும் மாலும் அயனும்
ஊரும் படர் சிறைப்புள்
மாகம் இகந்து வந்திருக்கும சேக்கை
எனவும் வானவர்கோன்
நாகம் அணையும் கநதெனவும நாட்டும
யூப ஈட்டமுள.

இப்பாடலைச செருகு பாடல் எனக கொள்வதா, ஆசிரியரே முதலில் வஞ்சகமாக அமைதத பாடல் எனக் கொள்வதா?

கௌணியராகிய கபிலர் மதத்தைப் பரவச்செய்த ஞான சம்பந்தரை வேதவேள்வி நிலை நிறுததுமபொருட்டுச் சமணைத் தொலைத்தார் என்ற கடூரமான பொய்யும, தந்தை சிவபாத இருதயர்க்கு யாகஞ் செய்யும் பொருட்டு ஞானசம்பந்தர் பொற்கிழிககாக எமபெருமானைப் பிரார்த்தித்தார் என்ற படிற்று மொழியும், தில்லைப்பதிகத் தேவாரப் பாவிலுள்ள 'பறப்பைப் படுத்து எங்கும் பசுவேட்டு எரி ஓம்பும் சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய' என்ற பஃதியிலுள்ள கட்டுப்பாடும் ஞானவிரோதிகளால் புனையபபட்டன என நாம் கருதவேணடியிருக்கிறது.

சுகிருத் பிராப்தி.

நட்புப்பேறு என்ற மேற்படி கொள்கையை அநுசரித்தே அப்பூதி நாயனர் திருநாவுக்கரசுக்கு மரியாதை செய்தார் என்று நாம் கொள்ளவேண்டியிருக்கிறது.

சாங்கியகாரிகையில் 21வது சுலோகம் கவனிக்கத்தக்கது,

*புருஷ பிரகிருதி சம்யோகமானது முடவன் குருடன சம்யோகத்தை ஒப்ப, இருவரின் நன்மைக்காக ஏற்பட்டது; அதாவது பிரதானத்தைப் புருஷன் பார்க்கும் பொருட்டும் பார்த்த பின் புருஷன கைவல்ய நிலை அல்லது தனிமை நிலையை அடையும்பொருட்டும். இந்த சம்யோகத்திலிருந்து படைபபு ஏற்படுகிறது.

வடமொழி சுலோகம் வருமாறு:

புருஷஸ்ய தர்சனார்த்தம் கைவல்யார்ததம்
ததா பிரதானஸ்ய,
பங்கு வந்தவத உபயோரபி சம்யோகஸ
“தத் கிருத” சர்க்.

கதைவரலாறு: ஒருமுடவனும ஒருகுருடனும ஒன்று சேர்ந்து தங்களுடைய நடைததொழிலையும் பார்வைத்தொழிலையும் ஒருவர்க்கொருவர் பயன்படுததிக் கொண்டார்கள். முடவன் குருடனின் தோள்மேல் ஏறி முடவன் வழி காட்டிக் குருடன் வழி நடந்து இருவரும் குறித்த இடம் சென்றார்கள். குறித்த இடம சென்ற பின் — ஆத்ம விடுதலைக்குப்பின் பிரகிருதி வினையொழிகிறது; ஆத்மாவானது பிரகிருதியைத் தியானம் செய்த பின் கைவல்யத்தை அடைகிறது. அவைகளுடைய காரியங்கள் முற்றடைந்த பின் அவைகளின் சம்யோகம் பிலகுகிறது: Nelson மொழி பெயர்த்த கௌடபாதர் பாஷ்யப் பகுதி.

இக்கருததானது திருத்தொண்டர் அந்தாதியில் சுந்தர மூர்த்தி சம்பந்தப்பட்ட பாட்டுக்களில் ஒன்றில் காணப் படுகிறது.

"கூற்றுக கெவனே புகல், திருவாரூரான்
பொன் முடிமேல்,
ஏற்றுத தொடையலும் இன்னடைக்காயும்
இடுதருமக்,
கோல் தொத்து கூனனும் கூன்போய்க்
குருடனும் கண் பெற்றமை
சாற்றித்திரியும பழமொழி ஆம இத்
தரணியிலே" (பாடல் 48).

இதே பாடலின் கருத்தைக்கொண்டதாகக் கருதப்படு கிற பாடல் பெரிய புராணம் 7வது சருக்கமாகிய வார்கொண்வன முலையாள் சருக்கம் — கூற்றுவநாயனார் புராணத்தில் கடைசிப் பாடலாகக் காணபபடுகிறது.

தேனும் குழலும பிறைதத திருமொழியாள்
புலவி தீர்க்க, மதி
தானும் பணியும், பகை தீர்க்கும் சடையார்
தூது தரும் திருநாள்,
கூனும் குருடும் தீர்த்து ஏவல் கொள்வார்
குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித்தீர்க்கிறேன் ஏழு பிறப்
பின் முடங்கு கூன்". (கூற்றுவ 9.)

மேற்படி சாங்கிய நூலிற் சொன்ன உவமானமானது புராணக்கதையாகிப் பொருள் விளங்கக் கூடாதபடி திருவந்தாதியாலும் பெரிய புராணத்திலும் வந்திருக்கிறது கவனிக்கத்தக்கது.

சுந்தர மூர்த்தி நாயனர் கண் மறைந்து பெற்றபாகம் ஏயர்கோன் கலிக்காம் நாயனர் புராணத்தில் 274, 279, 310 ஆகிய பாடல்களில் காணப்படுகிறது.

பெரியபுராணம 280ம் பாடலில் "பெண்பாகம் விழை வடிவிற் பெருமானை" என்று கூறியது நோக்கத்தகுந்தது. பெண்பாகம் என்பது பிரகிருதியாகிய பிரதானம். பெருமான் என்பது புருஷதத்துவம்.

287ம் பாடலில் சுந்தரமூர்த்திக்கு முதலில் இடக்கண் கொடுத்ததாக சொல்லப்படுகிறது. இது இடது பாகத்திலுள்ள பார்வதி தேவியார் அருளால் பிரதானத்துடன் கலந்து உலக நுகர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டது போலும். திருவாரூரிலிருக்கும் பரவை நாச்சியாராகிய பிராகிருத நிலைமை நுகரப்போவதால் இவ்வாறு முதலில் இடக்கண் என்று சொல்லியிருக்கிறதுபோலும்; சங்கிலி என்பது பிராகிருத நிலேயோடு சங்கம் அல்லது பற்றுதல் இல்லாத முத்தி நிலை என நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. முத்திதசையில் பிராகிருத நிலை தெரியாதபடியால் சங்கிலியுடன் ஒற்றியூரிலிருக்கும் பொழுது சுந்தரமூர்த்திக்குக் கண் மறைந்தது.

288ம் பாடலில் சுந்தர மூர்த்திக்குக் கண் அருளியவுடன் பெருமான் மூலைச்சுவட்டுக் கோலத்தைக் காட்டினதாகக் கூறுகிறது. காமம் வெகுளி மயக்க மாகிய முத்தன்மைக்குரிய மும்மூலையுடைய பிராகிருத நிலையைக்குறிப்பதாகத் தோன்றுகிறது.

பிராகிருதம் ஆலம் எனப்படுவதும் கவனிக்கத தகுந்தது.

290ல் 'சடையார்' என்பது முக்குணக் கற்றையைக் குறிக்கிறது.

30?ல் தோழமைததிறம என்பதும் 306ல் தேவீாசிரி யன் என்பதும சாங்கியத்திலுள்ள சுகிருத் பிராப்தி என்ப தனை நினை வூட்டுகின்றன.

திருவாசகம்

இந்நூல் 38வது பதிகம் திருவேசறவு என்னும் பதி கத்தின் 4வது பாடல் மாணிக்கவாசகரின் சித்தாந்தத்தை நன்ருய்க் காட்டுகிறது. அப்பாடல் வருமாறு:

பச்சைத்தாள் அரவாட்டீ படர்சடை
யாய் பாதமலர்
உச்சததார் பெருமானே அடியேனை
உய்யக் கொண்டு (4)
எச்சத்தார் சிறு தெய்வம் ஏத்தாதே
அச்சோ என்
சித்தத்தாறு உய்த்தவாறன்றே உன்
திறம் நினைந்தே.

இப்பாடலில் எச்சத்தார் சிறு தெய்வம் எனபது யாகத் தில் அவி நுகர வரவழைக்கப்படும் இந்திரன், அக்னி, சூரியன், சந்திரன் போன்ற பௌதிக தெய்வங்கள் இவை களுடன் குண தெய்வங்களாகிய பிரமா, கூற்றுவன், காமன் முதலிய தெய்வங்களும் கருதப்படும். இக்கருத்தே திரு வாசகம் 14வது பதிகம் திருவுந்தியார் என்னும் பதிகத்தில் வரும் பாடல்களிலிருந்து வலியுறுகின்றது. அப்பாடல் களில் இரண்டு பாடல்கள் கவனிக்கத் தக்கவை.

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீபற
உருத்திர நாதனுக்கு உந்தீ பற (5)

நான் மறையோனும் மகதது இயமான்படப்
போம் வழி தேடுமாறு உந்தீபற
புரந்தரன வேள்வியில் உந்தீபற
பாலகனார்க் கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச்சடையற்கே உந்தீபற
குமரன் றன் தாதைக்கே உந்தீபற.

இப்பாடல்களில் உருத்திரன், குமரன், குமரன்தாதை என்ற பதங்கள் யாகத்திற்குத் தாழ்ந்த நிலை கொடுத்த கபில முனியை நோக்குகின்றன. மகத்து இயமான் = யாகத்தை நடததும் ஹோத்திரி என்னும் புரோஹிதன். கபில முனியாலும் சைவத்தாலும் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டவன் இயமானன். இப்பேர் சாங்கியத்தில் சொன்ன புருஷ தத்துவத்தைச் சுட்டாது. அப்படியிருந்தும் பின் வந்த ஆசிரியர்களால் பாடப்பட்டதாகக கூறப்படுகிற சில சைவப் பாடல்களில் அஷ்ட மூர்த்திகள் இவை எனக்குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது புருஷன், மைந்தன், உயிர் என்று பல் வகையாகக் குறிப்பிடப்படும் தத்துவத்திற்கு இயமானன் என்ற பெயர் பிழைபடக் கூறபபடுகிறது. இது கவனிக்கப் பட வேண்டிய நூற் பிறழ்ச்சி. இது வடமொழி சாகுந்தல நாடகத்தின் காப்புக்குரிய நாந்திச் செய்யுளிலும காணபபடுகிறது. புருஷன் என்பதற்குப் பதில் ஹோத்ரி என்ற பேர் காணப்படுகிறது.

46வது பதிகம திருப்படை எழுச்சியில் முதற்பாடல் கவனிக்கததக்கது. அது வருமாறு 'ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப்பறை அறை மின்

மானமா ஏறும ஐயர் மதி வெண் குடைகவிமின
ஆன நீற்றுககவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம் நாம மாயப் படைவாராமே.

இப்பாடலில் ஞானத்தாள என்பது பாபத்துக்கு உப மான பெயரான சிகையை அறுக்கும் வாள் அல்லது கத்தி ; இது தமிழில் மழி வாள் எனப்பட்டது ; இதுதான் புத்தன் துறவுக்குப் போகும்போது அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இச்சொல்லைத்தான் 'மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடில்' என்ற குறட்பாவில் ஆண்டிருக்கிறது. பின்னல் மழிவாள் என்பது மழுவாள் என மாற்றப்பட்டு சிவபிரானும் சிவபக்தனன பரசுராமனும் மழுப்படையுடையவர்களாகக் கற்பனை செய்யப்பட்டது. வீரனகிய (வைராக்யம் அடைந்த) புத்தன தவறுதலாக க்ஷத்திரியன் எனப்பட்டான் ; புத்தனின் மாறு ரூபமான பரசுராமன் தவறுதலாகப் பிராமணன் எனப்பட்டுப் புராணக் கதைகள் புனையப்பட்டன.

மேற்படி பாடலில் 'மானமா' என்பது அளவு நூலாகிய மிருக வாகனம் என்பது பொருள் ; கபிலன் பதஞ்சலி முதலியோரின் தத்துவ அளவு நூலைப் பயின்று முத்தி நிலைக்குச் செல்லலாம் என்பது கருத்து. மான நூல் செய்தவன் மாணி எனப்பட்டான். இச்சொல் தமிழில் மாணி என மாறி ஆலமரத்தடியில் உபதேசித்த மார்க்கண்டனும், ஞானப் பாலை உள்ளமாகிய சிவலிங்கத்திற்கு ஆட்டிய சண்டேசுரனும் மாணி எனக் கூறப்பட்டனர்.

மாணுவென்றிக் காலன் மடியவே
காணுமாணிக் களித்த காழியார்

திருஞா. ச. தேவாரம்

மருள் துயர்தீர அன்று அர்ச்சித்த
மாணி மார்க்கண்டேயர்க்காய்,

தி. ந. தே.

மாணிக்கு உயிர்பெறக் கூற்றை உதைத்தன
........மாற்பேறுடையான் தன் மலரடியே

திரு. ந. தே.

மேற்கண்ட பாடல்களில் மாணி—(மானி) மார்க்கண்ட முனியைக் குறிக்கின்றன.

மாணி பால் கறந்தாட்டி வழிபட
நீணுலகெலாம் ஆளக் கொடுத்த என்
ஆணியை..... . ...
..... தமியேன் மறந்து உய்வனோ

திரு. நா. தே.

இப்பாடலில் மாணி என்பது சண்டேசுரனைக் குறிக்கின்றது.

இன்னும் திருததொண்டத தொகையில் கடைசிப் பாட்டில் வரும் ' பூசல் வரி வளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன் ' என்பதில வரி வளையாள் என்பது மங்கையர்க்கரசியாரைக் குறிக்க, மானி என்பது மார்க்கண்டன் என்பதைக் குறிப்பதாகப் பொருள் செய்ய இடமிருக்கிறது. 'தென்னவனாய் அரசாண்ட செங்கணார்' என்ற திருத்தொண்டத் தொகைப் பகுதி தக்ஷிணாமூர்த்தியைக் குறிக்கலாம். சோழ அரசனைக் குறிக்க வேண்டியது அவசியமில்லை. சிலந்திப்பூச்சி தன் உடம்பிலிருந்து நூல் உண்டாக்குவதையும் அந்நூலை ஒடுக்குவதையும் சாங்கிய நூலில்பிரகிருதியிலிருந்து படைப்புப் பொருள்களை இயற்கையாகப் பரிணமித்து ஒடுக்கும் சக்திக்கு உவமானமாக எடுததிருக்கிறது. புததர் பிறக்கும்போது புததருடைய தாயார் காட்டில் ஒரு மரத்தின் கிளையில் உயரத தூக்கிக் கைகள் கட்டப்பட்டிருந்தாள்

என்ற கதையானது பெரிய புராணததில் செங்கணுர் தாயார் தலை கீழாகத் தன் காலால் மேல் தூக்கிக் கட்டப்பட்டாள் என்ற கதையை ஒததிருக்கிறது. இவ்விரண்டு கதைகளும் கபிலர் ஆகாயத்திலிருந்து பூமிக்கு இழிந்தார் என்ற கதையை ஒட்டிப் புனையப்பட்டிருககின்றன. ஆதலால் சிவபிரான் தோழரான வாதவூர்க் கபிலர்க்கும அவர் சிஷ்யர் பதஞ்சல முனிவர்க்கும உள்ள தொடர்பைத்தான் வெள்ளியம்பலத்தில் தக்ஷிணுமூர்ததியின் மாறு ரூபமான நடராஜன் முன் பதஞ்சலி நிற்கிருர் எனச் சொல்லிக் காட்டுகிறது.

மாஜும்தார் என்னும் பெங்காளி 'ஆசிரியர்'

இவர் இங்கிலீஷில் எழுதிய ஸவர்ண தீபம என்ற நூலில் ஜாவா, சுமாத்ரா முதலிய தீவுகளிலுள்ள கட்டடங்கள், பழநூல்கள் முதலியவற்றிலிருந்து அததீவுகளின் பழைய நாகரீக முறை கலிங்க தேசம், வட இந்திய தேசம ஆகிய இரு பாகங்களிலுள்ள நாகரீக முறையை ஒத்திருக்கிறது எனக் குறிப்பிட்டிருக்கிறது.

இந்நூலில் 114-ம பக்கத்தில மகா காரணர் ஆகிய கடவுளால் கூட்டப்பட்ட ரிஷிகளைப் பேர் குறித்துக் குறிப்பிடுகையில் நாரதர், கபிலர், தும்புரு முதலிய பேர்கள் ஆசிரியரால் சொல்லப்படுகின்றன. திருவிளையாடற் புராணம்போன்ற தமிழ் நூல்களில ரிஷிகளைக் குறிப்பிடும் சமயத்தில் கபிலர் பேரை ஒழித்து மற்றப பேர்களைச் சொல்லியிருக்கிருர்கள். சங்கப் புலவர்களை எண்ணுவதில் கபிலர், பரணர், நக்கீரர் எனக் குறிப்பிடப்படுகிறது. இம்முறையிலிருந்து கபிலர் ஏதோ ஒரு காரணத்தால் மறைக்கப்பட்டிருக்கிறு என்று கருதவேண்டியிருக்கிறது.

மேற்கண்ட மாஜம்தார் நூலில் 107-ம் பக்கத்தில் சதுர் ஐசுவரிய மந்திரம் என ஒரு தொடர் காணப்படுகிறது. நாலு ஐசுவர்யங்களாவன தர்மம், வைராக்யம், ஞானம், ஐஸ்வரியம் என வகுத்துக கூறப்படுகின்றன. வடமொழி சாங்கிய நூலின் உரையில் கபில முனியானவர் தர்மம், பிரஜ்ஞை, வைராக்யம், ஐஸ்வரியம் என்ற நால்வருடன் பிறந்ததாகக் கூறப்படுகிறது. ஆகவே கபில சாங்கியக் கருதது ஜாவாமுதலிய தீவுகளுக்குச் சென்றதாகத தெரிகிறது. ஆனதால் தமிழ் நாட்டிலும் தக்ஷிணாமூர்த்தி அல்லது தென்னவன் என்ற பேர் மூலம் சாங்கியம் வழங்கப்பட்டிருக்கவேண்டும் எனத் தெரிகிறது. பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்திலும் வேம்பததூரார் திருவிளையாடற் புராணததிலுமுள்ள அஷ்டமா சிததி உபதேசித்த படலங்களைக் கவனித்தால் கபிலரின் மாறு ரூபம்தான் தக்ஷிணாமூர்ததி எனத தெற்றென விளங்கும்.

பரஞ்சோதி நூலிலுள்ள படலத்தில் 4-வது பாடலில் பிருங்கி, நந்தி, சனகாதி முனிவர்க்குச் சிவபிரான் அமுதம் ஊறு சிவ கதைக் கரும்பு அருததிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. சாங்கிய காரிகை பாஷ்ய காரராகிய கௌடபாதர் தம்முடைய முதற் சுலோக பாஷ்யத்தில் சனகன், சநாதனன், சநந்தனன், கபிலன், பிருகு, ஆசுரி, பஞ்சசிகை, ஆக 7 முனிவர் கூறப்படுகின்றனர். இவர்கள் ஆதி குரவர்கள் எனப்படுகின்றனர் இங்கு பிருகு என்பதும் பிருங்கி என்பதும் ஒரே முனியைக் குறிக்கின்றன எனக் கருத வேண்டும். கபிலருடைய தமிழ் நூல் குறிஞ்சிப் பாட்டின் அடியில் கூறப்பட்ட பிருகததனும் இதே முனிவனைத்தான் குறிக்க வேண்டும். ஆகவே கபிலர் தமிழ் நாட்டிற்குரியார்

என்பதும் அவர் ஆதியில் தமிழில் சாங்கிய நூல் இயற்றினர் என்பதும் பிற்காலத்தில் மறக்கப்பட்ட விஷயங்களாகத் தெரிகிறது.

மேலும் மேற்படி படலங்களில் ஆலமரத்தடியில் குமரனுடைய செவிலித் தாயாராகிய இயக்க மாதர்கள் ஞானம் உபதேசிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இயக்கர் தமிழ்ச் சொல்; இதுயக்ஷர் என வடமொழியில் மருவியது. குபேரன் யக்ஷன் எனப்படுகிறான். சிவபிரான் தோழன் எனப்படுகிறான். இவ்வாறு தமிழ்க் கபிலனே குபேரனாக மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. குபேரன் என்பது குருபரன் என்பதன் மருவுமாயிருக்கலாம்.

முக்குணம்

திருக்குறள் பொருட்பால் அறிவுடைமை என்னும் அதிகாரததில் 3 வது குறட்பாவான

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு'

என்ற குறட்பாவுக்கு பரிமேலழகர் எழுதிய உரையில் குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உறுதிப பொருளை பகைவர் வாயினும் கெடுபொருள் நட்டார்வாயினும் ஒரே வழிக்கேட்கப் படுதலான் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்றார் என்ற வாக்கியம் காணப்படுகிறது.

காமம் வெகுளி மயக்கம் என்ற இக்குற்றங்களில் (அல்லது முக்குணங்களில்) பகைவர் என்றதால் வெகுளியும் நட்டார் என்றதால காமமும் சுட்டப்பட்டன.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (அறிவுடைமை 8)

என்ற குறட்பாவிலுள்ள பேதைமை என்றும் சொல்லால் மயக்கம் அல்லது செருக்கு சுட்டப்படுகிறது. இக் குறட்பாவின் உரையில் ‘அஞ்சாமை எண்ணாது செய்து நிற்றல்; அஞ்சுதல் எண்ணித்தவிர்தல்’ என்றவாக்கியத்தால் பேதைமை என்பது மயக்க எண்ணம் எனக் குறிப்பிடப் பட்டது.

குணங்கள் மூன்றும் மாறுதல் யென்பதில் பிறப்பிற்கு காரணமான பேதைமை மாறாமல் அடிப்படையாய் நின்று எஞ்சி நின்ற காமமும் வெகுளிமட்டும்தான் மாறி மாறிவருவனவாகக் காணப்பட்டபோதிலும் இனம் பற்றிப் பேதைமையும் சேர்த்துக் குணங்கள் மூன்றும் மாறிவரும் என்றார். மாறி வருதல் என்றால் காமம் வெகுளி என்ற குணஙகளில் அளவில் கூடுதலும் குறைதலும் என்பது பொருள். மனிதனுடைய நுகர்ச்சிக்குரிய பொருள் பெண், செல்வம், கல்வி ஆகிய முப்பொருளாகக் காணபபடுவதால் குணமும மூன்று எனப் பண்டை அறிவாளரால் கொள்ளப் பட்டது எனத தெரிகிறது.

“ மாதர் தம் கூர்த்த நயனக் கொள்ளையிற்
பிழைததும
செல்வம் என்னும அல்லலிற் பிழைத்தும
கல்வி என்னும் பல் கடற்பிழைததும்”

என்று திருவாசகம் போற்றித் திருவகவலில கூறியிருக் கிறபடி நிட்திசய இனபமாகிய மோக்ஷத்திற்குத தடையா யிருப்பன காமம, வெகுளி நிமித்தமாகக் கொண்ட செல்வம,

மயக்கத்தை நீக்காத கல்வி ஆகிய மூன்றும்தான். ஆகவே காமம் வெகுளி மயக்கம் என்பன முக்குணம் எனப்படும்.

திருக்குறள் 36-ம் அதிகாரம் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்திலுள்ள 10-வது குறட்பா வானது

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக் கெடும் நோய்

என்று அமைந்திருக்கிறது.

இக் குறளின் உரையில் 'அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் என வடநூலார் குற்றம் ஐந்து என்றார்'' எனப்படுகிறது.

இவ்வுரைக் கூற்றிலிருந்து காமம் வெகுளி மயக்கம் எனக் குற்றத்தை மூவகையாகக் கூறுதல் தமிழ் நூலார் மரபு என உத்தேசிக்கப்படுகிறது.

'குற்றம் கடிதல' என்ற அதிகாரத்தின் முதற் குறட்பாவில் தமிழ்மரபின்படி உள்ள முக்குணமும் 'செருக்கும், சினமும், சிறுமையும்' என்று விவரிக்கப்படுகின்றன. வடநூலார் குற்றங்களை ஆறாகப்பிரித்து அவற்றைப் பகைவர்க் கம் எனக்கூறுவார் என இவ்வதிகாரத்தின் அவதாரிகையில் உரைகாரர் கூறுகிறபடி அவ்வதிகாரம 2-வது குறட்பாவில் எஞ்சிய முக்குற்றம் கூறப்படுகின்றன. அவை இவறல் எனப்படும் லோபக்குணம, மாணமையினீங்கியமானம், அளவிறந்த உவகை எனப்படுகின்றன. இவை மூன்றும் முதற் குறட்பாவிற்குறிய முக்குற்றங்களில் அடங்குகிறதால் குற்றம் மூன்று என்பதே நேரான கொள்கை.

திருக்குறள் 84-ம் அதிகாரம் பேதைமை அதிகாரத்தின அவதாரிகையில் வெகுளி, காமம் ஆகிய இருவகைக்

குற்றங்களுக்குப் பேதைமையாகிய மயக்கம் அடிப்படைக் குற்றம் என்ற கருத்துண்டாகப் பரிமேலழகர் எழுதிச் செல்கிறார்.

இவ்வதிராரம 3-வது குறட்பாவில பேதமை மூன்று கிளைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன நாணுமை, நாரின்மை, நாடாமை எனபன ; இவையும் முறையே பொருந்தாக் காமம், தாண மின்மை, மயக்கக் கல்வி என்பவற்றிற்கு நேர் எனப் படலாம்.

மெய்யுணர்தல் 2-வது குறள்வருமாறு ;

இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சியவர்க்கு.

இக் குறட்பாவின் உரையில் மாசறு காட்சி என்பது கேவல உணர்வு எனப்பட்டது. அதாவது மாசு எனப்படும் காம வெகுளி மயக்கங்களாகிய முக்குற்றம நீங்கிய ஆத்ம ஞானம். கேவலம் என்றால் தனித்துப் பரிசுததமாய் இருத்தல். உரையில் மாசு இன்னது என விளக்கவில்லை. மருள் என்பது பேதைமை. இருள் என்பதனை ஆற்றலை உரையில் கொண்டுவரவில்லை. இருள் என்றால் இகலோகததில் அனுபவிக்கப்படும் நிலையில்லா இன்பம். ஞானப்பிரகாசத்திற்கு இக நுகர்ச்சி தடையாய் நிற்றலால் அந்நுகர்ச்சியானது இருள்என உவமிக்கப்பட்டது.

மேற்படி ஆராய்ச்சியிலிருந்து ஆத்மா நிற்கும் நிலை இரண்டு என்பதும் அவை இன்பமாகிய மோக்ஷநிலை, துன்பமாகிய பிறப்பு நிலை என்பதும் பிறப்பு நிலைக்கு அங்கமாவன காமம் வெகுளி பயக்கம என்பதும பெறப்பட்டன. இனி

வட மொழியில் இனபததை சத (உண்மை) என்றும் துன்பததை காயம் குரோதம் அஹங்காரம் என்றும் கூறுகிறார்கள். பகவதகீதை 16-வது அததியாயம் 18-ம் சுலோகம் அடியிற்கண்டபடி இருக்கிறது.

அஹங்காரம பலம் தர்ப்பம் காமம் குரோதச
ஸம்ஸ்ரிதா

மாம் ஆத்ம பரதேஹேஷு பிரதய ஷந்தோ
அப்ய ஸூயகா:

இச்சுலோகத்தில் பலம் தர்ப்பம் என்பன அகங்காரததில் அடங்குவதால் குற்றம் மூன்றே.

மேல் 16-வது சுலோகததில் இக்குற்றங்கள் வயப்பட்டவர்கள் "மோஹ ஜாலஸம் ஆவ்ருதா:" (மோகவலையில் பிடிக்கப்பட்டவர்) எனப்படுகிறார்கள்.

இங்கே மோகம் என்பது பேதைமை. இபபேதைமையானது குறளில் யான் எனது என்னும் செருக்கு 'எனப்படுகிறது. பகவத்கீதை 7-வது அததியாயம் 13-வது சுலோகத்தில் 'ஜகத்திலுள்ளவர்கள் முக்குணமயமான இயற்கை (பிறப்பு)த் தன்மையால் மோஹிக்கப்பட்டு அக்குணங்கட்கு அப்பாலுள்ள நிலை (துரிய நிலை அல்லது நாலாவது நிலை) யானதும் மேலானதும் நித்யமானது முள்ள தன்மையிலுள்ள என்னை அறிகிறதில்லை! என்று கூறப்படுகிறது.

மேல் 12-வது சுலோகத்தில் முக்குணங்களின் பேர்கள் சாத்விகா பாவா, ராஜஸா பாவா, தாமசா பாவா 'என்று கூறபபடுகின்றன. இங்கே வீட்டின்பத்திற்குரிய சாத விகத்தை முக்குணத்தில் ஒன்றாகச் சொன்னது சங்கேத

பதம் தவறி வழங்கப்பட்டதால் ஏற்பட்டது எனக்கருதி வேண்டும்.

பகவதகீதை 2-வது அத்தியாயம் 16-வது சுலோகத்தில், ஸத் என்பது அஸத என்பதற்கு மாருக மூன்று குணமும் கடந்த உண்மைப்பொருள் என்ற கருத்தில் வழங்கப்படுகிறது. அச்சுலோகம் வருமாறு.

ந அஸதோ வித்யதே பாவோ ; ந அபாவோ
விதயதே ஸத :
உபயோரபி திரஷ்டோ அந்தஸ்த் வனயோஸ்
தத்வதர்ஸிபி !

இச்சுலோகத்தில் அஸதோ, ஸத எனற சொற்கள் முறையே நிலையற்றது நிலையுள்ளது என்ற கருததுக்கள் கொண்டன.

ஆகவே ஆதியில் நாலாவது நிலையான கவலையற்ற நிலை தான் சத் என்ற பெயருக்குரித்தாக இருந்தது எனத தெரிகிறது. சங்கேத பதங்களைமாற்றி ஆளப்பட்ட பிற்காலத்தில் காமம் குரோதம், அஹங்காரம் என்பதற்குபபதிலாக சத், குரோதம், அஹஙகாரம என்று வழங்கப்பட்டுப் பின்னல் இவை சத், ரஜஸ், தமஸ் என்று சொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

சத என்ற நாலாவது நிலை துரியநிலை எனப்பட்டது. இந்நிலையை அடைந்தவன் மௌனம் சாதிப்பான். அந்நிலையை அடைந்த முனி ஒருவர் துர்வாஸர் எனப்பட்டார், வடமொழியில் துர்வாஸர் என்று இச்சொல் தவறுதலாகவும் எழுதப்பட்டது. பிற்காலத்தில் துர்வாஸர் வேறு முனி, துர்வாஸர் வேறு முனி என்ற

6502a

கொள்கையும் பரவினது. துர்வாஸருக்கு ஏற்பட்ட புராணக்கதை துர்வாஸர்க்கு மாற்றப்பட்டது. ஆதியில் துர்வாசர் என்பவர் அத்திரி முனிக்கும் அநசூயா என்ற கன்னிக்கும் பிறந்தவர் எனப் புராணக்கதை ஏற்பட்டிருக்க வேண்டும். அத்திரி என்றால் முக்குற்றமும் ஒழிந்த நாலாவது நிலை அடைந்த முனிஎன்று அர்த்தமாகி அநசூயா என்றால் அசூயா அல்லது மும்மலம் நீங்கிய பரிசுத்தகுணம். அநசூயா மும்மூர்த்திகளையும் குழந்தைகளாகப் பாவித்து அவர்களுக்குத் தன் முலைப்பாலைக் குடிப்பித்தாள் என்ற கதையால் நாலாவது நிலைக்குரிய பரமேசுவரன் அல்லது பேராண்டவன் தன்மை உணர்த்தப்பட்டது. மூன்று நிலைகளில் ஒன்றற்குரிய பிரமா, விஷ்ணு என்ற சங்கேதபதங்களை நாலாவது பொருளான பரமேசுரன் என்ற கருத்தில் பின்னுள்ளோர் வழங்கி அத்துவித வேதாந்தம் என்றும் வைஷ்ணவம் என்றும் மதங்களை ஏற்படுத்தினார்கள். பிரமா, விஷ்ணு நீங்கலாக எஞ்சி நின்ற இந்திரன் என்ற சங்கேதச் சொல்லிற்குப் பதிலாக துரிய நிலைக்குரிய உருத்திரன், சிவன் என்ற பதங்களை வழங்கினார்கள். உருத்திரன் என்ற பதம் இவ்வாறு தாழ்த்தப்பட்டதை துரியநிலை வணக்கத்திற்குரிய சைவசித்தாந்திகள் தடுத்துவந்தார்கள். மாணிக்கவாசகருடைய திருவுந்தியாரில் 'உருத்திரனுக்குந் தீட்ற' என்று துரிய நிலைக்குரிய கடவுள் என்ற கருத்தில் உருத்திரசப்தம் வழங்கப்படுகிறது. வைஷ்ணவழக்கையொட்டி அறியாத சில சைவர்களும் உருத்திரனை முக்கடவுளில் ஒருவராகக் குறிப்பிட்டு நாலாவது பொருளைப் பரமசிவன் என வழங்கவேண்டும் என்று அறுதியிட்டார்கள்.

அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் ஆதியில் இல்லறமாகிய குடியாண்மை, பொருளாகிய அரசியல், இன்ப

மாகிய காதல் எனமூன்று விஷயங்களைக் குறித்ததாகத் தெரிகிறது. இல்லறத்தில் அன்பு முக்கியமானதால் அவ்வறம் காமம் எனப்பட்டது. அரசியலில் போர் முக்கியமானதால் அவ்வரசுமுறை போர்க்குறிய வெகுளி எனப்பட்டது. பேதைமையின் நிமித்தமே காதல்தோன்றுவது எனக்கருதப்பட்டு இன்பம் மயக்கம் எனப்பட்டது. நாலாவது நிலை அடைவதற்குரிய துறவறம் முப்பாலில் அடங்கவில்லை. பால்வகை ஆதியில் நாலுஎனக் கருதப்பட்டதாகத் தெரிகிறது.

திருக்குறள் கடவுள் வாழ்த்தின் அவதாரிகையில் அறம் பொருள் இன்பம் என்பன முக்குணங்களான் அமைந்தன என்றும் அக்குணங்களாற்றுன் மூவராகிய முதற்கடவுளும அமைந்தன என்றும் கூறுவது நேரான முறை அன்று. கடவுள் வாழ்த்தி லுள்ள கடவுள் மூன்று பதங்களையும கடந்த துரிய நிலைக கடவுள். கபில சாங்கியத்தில் பிரமாமுதற் தேவர்கள், மனிதர், விலங்குகள் ஆகிய மூவரும் படைப்புப்பொருள்கள் எனக்கருதப்பட்டு அவர்கள் துரிய நிலைக்குரிய புருஷனினின்றும் பிரிக்கப்படுகிறுர்கள். இச்சாங்கியத்தைப் பின்பற்றியே சைவர்களும் வைஷ்ணவர்களும் தங்கள் கொள்கைகளை அமைத்திருக்கிறுர்களானபடியால் மூவராகிய முதற் கடவுள் என்று சொன்னது தவறு: மூவர்க்கு மேலான முதற்கடவுள் என்று கூறவேண்டும். இந்நிலைக்குரிய கடவுளைத்தான் கிறிஸ்தவர்களும் இஸ்லாத்திய முஸ்லிம்களும் வழிபடுகிறுர்களானபடியால் சநாதனப் பொருளாகிய துரியப்பொருளை வணங்கும் வைதீகர், பாகவதர், சைவர், ஆகிய மூவகை இந்துக்களும் கிறிஸ்தவர்களுடனும் முஸ்லிம்களுடனும் நேசபாவனை காட்டி

சுகிருத் பிராபதி அடையவேண்டியது அவசியம். சுகிருத் பிராப்தி என்பது சுநதரமூர்த்தி நாயனார் கண்ட தோழமை.

திருவிளையாடற புராணம் இரண்டாவது படலம வெள்ளையானைச் சாபம் தீர்ததபடலத்தில் துர்வாசமுனி யின நிலையும் துரியப்பொருளாகிய பேராண்டவன் நிலையும் நன்முய்க் காட்டப்படுகின்றன.

கருவாசனை கழிக்கும் காசி நகர் தனனில்
துர்வாச வேதமுனி தொல் ஆக மத்தின
பெருவாய்மையால் தன் பெயர் விளங்க ஈசன்
ஒருவா இலிங்க ஒளி உருவம் கண்டான

(2-ம் பாடல்)

இப்பாடலில் ஆகமம், ஈசன் எனற சொற்கள் கவனிக் கத் தக்கன. இலிங்கம் என்முல் முக்குணம் லயப்பட்ட இடம்.

8-ம் பாடலில் கடவுளரில் உததமன் என்று துரிய நிலைப் பொருளையும் அப்பொருளை அர்ச்சிதத முனியை உத்தமன் என்றும் கூறுவது கவனிக்கத் தக்கது.

11-வது பாடலில் வெள்ளிய செங்கண் விடையான் என்பது மும்மல நீங்கிய செம்மையான தியானத்தால வெண்மை எனபபடும் பரிசுதத நிலையுடைய விடையாகிய மோக்ஷ நிலையுடையவன்—(விடை=பாசம் விடுகை); செல்வத் தருக்கு = தருக்கு அல்லது பேதைமையால் நுகரப்படும் காமமும் பொருளும். காமம்பொருள்களுக்குரிய கடவுள் இந்திரன் என சங்கேதபதம் கொடுக்கப்பட்டபடியால் இந்தி ரன் துரியப்பொருளுக்குரிய உருத்திர குமாரனுக்கும் சிவ னுக்கும் மாற்முன் எனக்கருதப்பட்டான்.

இப்படலத்தில் 14-ம பாடலும் கவனிக்கத் தக்கது. அப்பாடல வருமாறு:

வண்டு உளரும் தண் துழாய மாயோன் இறு
மாப்பும்
புண்டரிகப்போது உறையும புததேன் இறுமாப்பும்
அண்டர் தொழவாழும் உன் இறு மாப்பும
ஆலாலம்
உண்டவனைப் பூசிததபேறு என்று உணர்ந்திலையால்.

இப்பாட்டில் மாயோன், பிரமா, இந்திரன் ஆகிய மூவ ரும் முக்குண முதல்வர் எனப்படுவது கவனிக்கத தக்கது.

திருக்குறள் உரைப்பாயிரததில் இந்திரன் முதலிய இறை வர் பதம என்றது இப்பாடடில் கூறிய முக்கடவுளின் பதங் களே. சங்கேத சப்தஙகளின் பொருள்களைப பிறழ்ச்சி செய்து அபபதங்களைப் பிரயோகிதத பல்வகைச சமயத் தார்க்குப் பயந்து உரையில முக்கடவுளின் பெயர்கள் விவர மாகக் கூறப்படவில்லை என்று நாம கருதவேண்டியிருக் கிறது.

வேமபததூரார் திருவிளையாடலில் துர்வாஸ முனி இந் திரனுக்குக் கொடுத்த சேடஙகள் தாமரை துளபமாலை ஆக இரண்டுவகை காணப்படுகிறது. பரஞ்சோதிமுனி திருவிளையாடலில் தாமரைப்பூ ஒருவகையே காணப்படு கிறது.

அறம் அறிவு மெய்

திருக்குறளில் அறம் அறிவு மெய் என மூன்று சப்தங் கள் கேட்கபபடுகினறன. அவற்றுள் அறம் என்றது இல் லறத்திற்குரிய காம நிலையையும் வேந்தின் அறத்திற்குரிய

வெகுளி நிலையையும் குறிக்கும். அறிவு என்பது உலகப் பொருள்களின் தன்மையை அறிதலைக் குறிக்கும்; மெய் என்பது தன்னை அறிதலைக் குறிக்கும். அறம் அறிவு மெய் என்பன இங்கிலீஷில் முறையே control of emotions, scientific knowledge, philosophy என்னும் கருத்துக் களுக்கு நேர்; இம்மூன்றில் அறம் என்பதுவே முக்குணமாகப் பிரிக்கப்பட்டது. முக்குணம் கடந்த நிலை மெய்ந்நிலை.

பகவத கீதை 18-வது அத்தியாயம் 66-வது சுலோகத்தில் 'சர்வ தர்மங்களையும் விலக்கினவன் என்னிடம் சரணம் அல்லது அடைக்கலம் புகுகின்றான்' என்று பகவான் கூறுவதாகச் சொல்லப்படுகிறது. இங்கே தர்மம் என்பது முக்குணம் அல்லது மூவியல்கள் என்று கருத்துக் கொடுக்கும். இந்த தர்மங்களில் பிறப்பினும்வித்து எனப்படும் அவா ஆகிய கர்மம் சத் எனப்பட்டது. சத் என்றால் இங்கே நல்லது என்று கருததல்ல. மூலமாக உள்ளது என்பது பொருள். முத்தர்மங்கள் கடந்த நாலாவது நிலையும் சாந்தி என்ற பொருளில் சத் எனப்பட்டது. புருஷனின் இயற்கைக் குணம் சாந்தி என்ற கருத்தில் இத்துரிய நிலையும் சத் எனப் பட்டது. பகவத் கீதையில் சத் என்ற சொல்லின் இரு வகைப் பிரயோகத்தால் மனக் குழப்பம் கொடுக்கும்படி வாக்கியங்கள் அமைந்திருக்கின்றன.

பகவத் கீதை 18-ம் அத்யாயம் 40-வது சுலோகத்தில் தேவலோகத்திலுள்ளாரும் முக்குண வசப்பட்டவர் என அவர்களுக்குத் தாழ்ந்த நிலை கொடுத்த பின் 17-வது அதி. 4-வது, சுலோகத்தில் சாத்விக குணமுள்ளவர்கள் தேவர்களை கும்பிடுகிறார்கள், ராஜசத தன்மையோர் ராக்ஷசர்களைக் கும்பிடுகிறார்கள். தாமசத் தன்மையோர் இறந்த மனிதரின் ஆவி

களையும் கொடும் தேவதைகளையும் கும்பிடுகிறார்கள் என்று சொல்லித் தேவர்களுக்கு உயர்ந்த நிலை கொடுப்பது பொருத்த மில்லாததாயிருக்கிறது. இதே மாதிரி சாதி வகுப்புக் கிரம மானது என்று உறுதிப்படுத்தும் சுலோகததிலும் மோக்ஷ நிலைக்குரிய சாத்விக குணத்தை உலகதது மக்களில் கல்வித் தொழில் பயிலும் வைதீகர்க்குக் கொடுத்து உரைப்பது பொருத்தமிலலாதது.

மடலேறுதல்

இச்சங்கேத பதத்தின் கருதது திருக்குறளிலுள்ள நாணுத துறவுரைததல் என்ற அதிகாரததிலிருந்து நன்றாய் விளங்குகிறது. இவ்வதிகாரம் முதற் குறட்பாவிலிருந்து மடல் என்பது நாணுத துறவுரைததல் என்ற கருத்துத் தருவதாக நாம் யூகிக்கலாம். 2-வது குறட்பாவில் நாண் நீங்கிய பின் மடல ஏறுதல் தோன்றுவதாகக் கூறப்படுகிறது. இதன் உரையில் 'மடன்மா' என்பது மடலாகிய மயக்கம் அல்லது மடலாகிய விலங்குத தன்மை என்று பொருள்படும். மூன்றாவது குறளில் நாணும் நல்லாண்மையும் நீங்குதலே மடல் ஏறுதல் எனப்படுகிறது.

4-வது குறளில 'காமக கடும புனல்' என்பது மடல் அல்லது காமவெள்ளம் எனப்படுகிறது.

5-வது குறளில் காம வெள்ளமாகிய மடல் மாலைக் காலத்தில் ஏறுவதாக அல்லது அதிகரிப்பதாகச் சொல்லப் படுகிறது.

முக்குணங்களில ராஜஸம் தாமசம என்ற இரண்டு குணங்களும கால பேதந்தோறும ஒன்றை ஒன்று அதிகரிப் பதுபோல் நாண் அலலது நிறையும் காம மடலும் கால வேறுபாடுபற்றி ஒன்றை ஒன்று அதிகரிக்கும.

6-வது குறளில மடல் ஊாதல் என்பது காம வெள் ளத்தை நாண் துறவு என்ற புணை மூலம் கடத்தல் என்பது பொருள்.

7-வது குறளில் பெணபாலார் மடலைக் கடக்க நாண் துறக்கமாட்டார் என்று கூறியிருக்கிறது. திருமங்கை யாழ்வார் திருமடலில் இவ்வொழுக்கம் தென்நாட்டு ஒழுக்கம் எனப்படுகிறது. வடநாட்டு ஒழுக்கப்படி பெணபாலார் நாண் துறந்து ஊர் மனறில் ஆடவர்போல் முறையிட்டுத தம் காதலனை அடையலாம் என்பது கருதது.

வடநாட்டார் வழக்கம் 8-வது குறட்பாவில் கூறப்படு கிறது. பிறர் மதம கூறுவது வள்ளுவர்க்கு வழக்கம்.

9-வது குறளில் மருண்டு என்னும் சொல்லால் மடல் என்ற சங்கேதச் சொல்லானது காம வெள்ளமாகிய மயக்கம எனப்பொருள் படும் என உணர்த்தப்படுகிறது.

மடல் அல்லது காமவெள்ளம் கைமிகுந்தபின் கற்பு நிலை (மண நிலை) என்ற அறததின் வழிப்படும் பொருட்டு தலைவி தோழி முதலியோர்க்கு முறையிடுவாள் எனபது 10-வது குறட்பாவின் கருத்து. தலைவன தலைவி ஆகிய இருவரின் ஏறிய மடல் மூலம் மட்டும் அன்னியில் நொதுமற் பெண்டிர் தூற்றும் அலராலும் காமக்கூட்டம் நிகழும எனபது அலரறி வுறுத்தல் என்ற அதிகாரததின் கருத்து. இவ்வதிகாரத்தின் 10-வது குறட்பாவின் உரையில் கடைசிப்பாகத்தில் ‘இவ் விருபது பாட்டும் புணர்தல் நிமித்தம்’ என்று கூறப்படு கிறது. இதிலிருந்து ‘புணர்ச்சிமகிழ்தல்’ என்ற களவியல் அதிகாரம நாணுத்துறவுறைத்தல், அலரறிவுறுத்தல் என்ற அதிகாரங்கட்குப் பின்னால் வைக்கப்பட வேண்டும் எனத் தெரிகிறது. இப்பொழுது வழங்கும் குறள் பதிப்புகளில்

உள்ளீவைப்பு முறையானது பிழையுடைத்து என நாம் கருதவேண்டும்.

இனிப் பொருளதிகாரத்திலும் டாக்டர் சுவாமிநாத ஐயரின் குறுந்தொகைப்பதிப்பிலும் மடலேறுதல்பற்றிக் கூறப்படுவன குறளுக்குப் பொருந்தாதவை: பின் வந்த சில புலவர் மடலேறுதல் என்ற தொடரைப் பனைமடற் குதிரை ஏறுதல் எனப் பிழைபடக்கொண்டு பாக்களும் இயற்றினர். அப் பாக்களும் குறுந்தொகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பண்டையோர் ஆண்ட 'மடல்' என்ற சங்கேத பதத்தைப் பின் வந்தோர் அறிவுடையார்க்கு நகையுண்டாகத் திரிபொருள் கொடுத்து ஆண்டனர். இவ்வுண்மை தமிழ் கற்பார் தெரிந்துகொள்ளவேண்டிய சிறந்த விஷயம்.

தமிழ் இலக்கணம்

திணை பால்

தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் ஆளப்பட்டிருக்கும் இருதிணை ஐம்பால் பகுப்பு முறை தமிழ் மொழிக்கேற்ற முறையன்று; வடமொழி யிலக்கணத்தைப் பின்பற்றிக் கையாண்ட முறை. தமிழ் முறைப்படி ஆணதிணை, பெண் திணை, அலிததிணை அல்லது அஃறிணை என மூன்று திணையும் (=Gender), ஒருமைப்பால், பன்மைப்பால், என இரு பாற்களும் (number) அமைந்திருக்கவேண்டும். விரவுத் திணையைக் கூட்டினால் ஆண், பெண், விரவு, அலி என நாலு திணை ஏற்படலாம். விரவுத் திணையை உயர்திணை அஃறிணையோடு விரவுத் திணை எனத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் கூறுவது பொருந்தாதது ஒன்றாகும். ஆண் திணை பெண் திணையோடு விரவுவதே விரவுத்திணை அல்லது பொதுத் திணை. தமிழில் பொருள் குறித்தே திணை வகுக்கப்பட்

ஷிருக்கிறது. வடமொழியிற்போல லிங்கம் எனப்படும் மொழி யிறுதி நோக்கித் தமிழிற்றிணை வகுக்கப்படவில்லை. வினைச் சொல்லிற்கு மட்டும் தமிழில் இறுதி நோக்கியே திணை வகுக்கப்படும்; நேராய்ச் சொல்லுமிடத்து வினையின் வெவ்வேறு திணைக்கு வெவ்வேறு இறுதி அமைந்திருக்கிறது. வடமொழியில் வினைக்குத் திணை கிடையாது; இடம், காலம், பால் ஆகிய மூன்றுதான் உண்டு. [பால்=எண்; number.]

உதாரணம்

அண்ணல், ஆண்திணை; தையல், பெண் திணை; மயில், குயில், இடும்பை என்பன அலித்திணை. குழந்தை, தெய்வம், ஆள், வாயில, தூது, கூலி, அறிவிலி, பேதை (=simpleton) என்பன விரவுத்திணை. செவியிலி போன்றன ஆண், பெண், அலி ஆகிய முத்திணைக்கும் விரவுத திணை. சாததன சாததி என்பன இடுகுறிபபெயர் ஆனபடியால் அச்சொற்களை உதாரணமாக எடுத்தல முறை தவறு. முடவன் முடத்தி என்பவை இயற்பொருளில் ஆண், பெண் திணைகளைக குறிதது ஆகு பெயரிலக்கணம மூலம் அலித் திணையைக குறிபபதால் விரவுத திணைச் சொற்களாகா. வடமொழியில் இலிங்க வகுப்பு ஏற்பட்ட மூல நோக்கத்தை முற்றும் மறந்து தமிழிலக்கணத்தில் ஆசிரியர்கள் திணைப் பாகுபாடு செய்தார்கள். இபபிழை முறை தமிழ் கற்பார்க்கு ஓர் இடர்ப்பாடாய முடிந்தது.

வடமொழி இலக்கணத்தில் திணை, பால், வேற்றுமை வகுப்பு

வடமொழி ஒரு காலத்திலும பேசப்படாத பாஷை என்பதற்கு திணை, பால், வேற்றுமையாக எல்லாப் பொருள் கட்கும் ஒருங்கே (Declenasion=மாறுபாடு இலக்கணம்) டிக்கிளன்ஷன் இலக்கணம அமைந்திருப்பதே சாக்ஷி. சாதா

ரணமாய் ஜனங்களால் பேசப்படும் பாஷையில் இவ்வாறு அமைந்திருக்காது. இம்மாறுபாட்டிலக்கணம் வாக்கியப் பண்ணிசை நோக்கிமட்டும் அல்ல சொற்களின் இயைபு எதுகை நோக்கி அமைந்திருக்கிறது. வடமொழியில் பெயர்ச் சொற்குமட்டும திணை உண்டு. வினைச் சொற்குக் கிடையாது. பெயர்ச சொலலை அடுதது வரும் தொகைச் சொல் (adjective) லுக்கும் அப்பெயர்க்குரிய திணையே உண்டு. தமிழிலும் இங்கிலீஷிலும் தொகைச் சொலலுக்குத் திணை கிடையாது. வடமொழியில் சொற்களின் பொருள் நோக்கித் திணை ஏற்படவில்லை. பெயர்ச் சொற்களின் ஈற்று நிலைநோக்கித் திணை ஏற்பட்டிருக்கிறது. பொது விதியாக குற்றெழுத்தில் முடியும் பெயர் ஆண் திணை எனப்படும்; சிறப்பாக குற்றெழுத்துக்களிலும அகாரததில் முடியும் பெயர் ஆண் திணைக்குரியது. நெடடெழுததில் முடியும் பெயரும், இ, போன்ற சற்று வெளிப்படையான ஓசையுடை எழுத்தில் முடியும் பெயரும் பெண திணை எனப்படும்; ம் போன்ற ஒற்றெழுததுமுதலிய ஊமை எழுததில் முடியும் பெயர் நபும்ஸகத் திணை எனப்படும். ஈற்றிலுள்ள திணைக் குறி எழுத்தானது குறி எழுதது அல்லது அடையாள எழுத்து எனப்படுவதால் வடமொழியில் அடையாளத் துக்குரிய லிங்கம என்னும சொல்லைப் பிரயோகப்படுத்தித் திணையானது ஆணிலிங்கப் பெயர், பெண்ணிலிங்கப் பெயர், நபும்ஸகலிங்கப் பெயர் எனப்படும். இத்திணைக் குரிய பெயர்கள் தமிழிற்போல் (இங்கிலீஷிலும்போல) ஆண் பொருள், பெண பொருள், நபும்ஸகப் பொருள் களைக் குறிக்கவில்லை. இந்த டெக்னிக்கல் குறியீடுகளி ஞல் வடமொழிப் பெயர்கள் பொருட்களின் திணையைக் குறிக்குமோ என்னும மயக்க உணர்ச்சியை நீக்க அத்திணை

கிளுக்கும் பிஜஒலி அல்லது கடுகோலித்திணை, நெட்டோலி அல்லது இழைஒலித்திணை, மத்திமஒலி அல்லது ஊமை ஒலித்திணை எனப் பெயரிட்டு வழங்கலாம். பெயர்ச் சொல்லின் திணையையே அடுத்து நிற்கும் அடைமொழித் தொகைச் சொல்லுக்கும் கொடுப்பதிலிருந்து Adjective என்ற பிரத்தியேகச் சொல்வகை (Part of speech) வட மொழிக்குக் கிடையாது. Good man, நல்ல மனிதன் என்ற தொடர்களில் அடைமொழியாய் நிறகும் good, நல்ல என்பன வற்றிற்குத்திணை கிடையாது. ஆனால் குலம (சம்பிராப்தயா) புண்யம், குலே மகதி (ஜாதயா) என்ற ராமாயண வாக்கியத் தில் அமைந்திருக்கும் குலம் புண்யம் என்ற பண்புத்தொடரி லும குலே மகதி (=பெரிய குலததில்) என்ற பண்புத் தொடரிலும் நபும்ஸகலிங்கமுடைய குல, என்ற பெயர் முறையே புண்ய, மகத் என்ற நபும்ஸகத்தழுவு சொற்க ளாற் அடுத்து வரப்பட்டிருக்கிறது. இப்படியே ஆண் லிங்கப் பெயர் ஆண்லிங்கத்தழுவு சொல்லாலும பெண்லிங் கப் பெயர் பெண்லிங்கத்தழுவு சொல்லானும் அடுத்து வரப் படும்.

இவ்வாறு தொகைச் சொல்லுக்கும் வடமொழியில் லிங்கப் பாகுபாடு ஏற்படுவதிலிருந்து தழுவு சொல்லாகிய adjective என்ற ஓர் சொல்வகை வடமொழிக்குக் கிடை யாது போயிற்று.

தழுவு சொல்லுக்கும் தழுவப்பட்ட பெயர்ச் சொல்லிற் குப்போல் லிஙகம ஏற்படுத்துவதன் நோக்கம் இரண்டு சொற்களும் தத்தம் கடைசிப்பாகத்தில் ஓர் இயைபுடைய எதுகையால் முடிந்து வாக்கியததிற்கு இசை ஏற்படுவது தான். இங்கிலிஷிலும் தமிழிலும பண்ணிசை (metre)

யோடுகூட பாட்டில் எதுகை இசைக்காக எதுகைச் சொல்லைத் தேடி அமைக்கவேண்டும். வடமொழியில் லிங்கத்தின் மூலம் எதுகை ஏற்படுத்திவிட்டதால் எதுகைவார்த்தைகளைத் தேடாமலே இசை அமைக்கக் கூடியதாயிருக்கிறது.

இந்த முறையால் சாதாரண ஜனங்கள் எளிதில் வடமொழியைப் பேசக்கூடாதபடி, பாஷை இரண்டு பிரிவடைந்தது. இலக்கணத்துடன் கற்றாராகிய வைதீகர் அரசர் பேசும் ஆரியப்பாஷை, வைஸ்யர் சூத்திரர் பேசும் பிராகிருத (இயற்கை அல்லது திருந்தாக் கொச்சை) பாஷை என இரண்டு பாஷைகள் ஏற்பட்டுப் பெரும்பான்மையான ஜனங்கள் மூடர்களாய் இகழப்பட்டார்கள்.

°தமிழில் பொருட்டிணை அமைவதற்கும் வடமொழியில் சொற்றிணை அமைவதற்கும் காரணம்.

தமிழில படர்க்கை வினைமுற்றுத திணைநோக்கி வந்தான், வந்தாள், வந்தது என ஆண், பெண், அலித்திணை என மூன்றாக வினைத்திணை வகுக்கப்பட்டிருக்கிறது. இம்மூன்றுக்கும் எழுவாய்யாகிய பெயர்ச்சொற்களும் பொருட்டிணை நோக்கி மூன்றாய் வகுக்கப்படுகின்றன.

வடமொழியிலோ படர்க்கைவினைமுற்றானது பொருட்டிணை நோக்கி வேறுபடாமல் வத்தி (=பேசுகின்றான், பேசுகின்றாள், பேசுகின்றது) என மூன்று பொருட்டிணைக்கும் ஒரே ரூபத்தில் அமைந்திருக்கிறது.

ஆனால் பெயர்ச்சொற்கள் 8 வேற்றுமைப் பொருளைக் குறிக்கவும் ஒருமை இருமை மும்மை எனமூன்று பான்மைகளைக் குறிக்கவும் மாறுரூபம் அடைகின்றன. ஒவ்வொரு வேற்றுமைக்கு மூன்று பான்மைவீதம் 24 மாறுதல் ஏற்படுகின்றன.

பெயர்ச்சொற்கு ஏற்படும் 24 ரூபங்களும் தீழுவு பெயர்ச்சொற்களுக்கு ஏற்படும் பொருட்டு எல்லாப் பெயர் களும் அ போன்ற நொய்க் குறியை ஈற்றில் உடைய பெயர், ஆ. இ. போன்ற இழைக்குறியை ஈற்றில் உடைய பெயர், ம் போன்ற ஊமைக்குறியை ஈற்றில் உடைய பெயர் என மூவகை யமைக்கப்படவேண்டியது அவிசிவமாய்விட்டது. இம்மூவகைப் பாகு பாடு படர்க்கை யிடத்திலுள்ள அவன், அவள் அதுஎனும மூவகைப் பொருட்திணைகளினின்றும் ஏற்படுகிறது.

இப்படர்க்கை சர்வ நாமங்களுக்கும் விணையாலணையும் பெயர்களுக்கும் ஆகிய இருவகைகருமட்டும் திணையேற்பட வேண்டியது அவசியமாயிருந்தபோதிலும் இசையுடைய ஒலி கள் பெருகிவருவதற்காக அஃறிணைப் பெயர்களும் காரண மில்லாமல் மூனறு திணைகளாக வகுப்கப்பட்டன. இந்த வகையால் வடமொழி பயிற்சிக்குக் கஷ்டமாயிற்று.

வடமொழியில் பெயர்ச்சொல்லுக்குரிய திணைப்பாகு பாட்டின் சிறப்பு.

வடமொழியில் ஏற்பட்டிருக்கும் திணைப்பாகு பாட்டை நாம் கவனிக்கும்பொழுது எல்லா சர்வ நாமங்களுக்கும் (Pronouns) பொருட் டன்மை நோக்கியே ஆண், பெண், நபுமசகம என்ற பாகுபாடு காணப்படுகிறது.

உதாரணமாக ஸ (அவன்) என்பது ஆண்திணையிலும், ஸா (அவள்) என்பது பெணதிணையிலும, தத (அது) என் பது நபுஸ்சகத்திணையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது. வடமொழியில் பெயர்களுக்கு 8 வேற்றுமை ரூபங்களும் ஒவ் வொரு வேற்றுமைப் பெயர்க்கு ஒருமை, இருமை, பன்மை (Singular and plural) என மூன்று பால (number)

வீதம் ஒரு பெயர்க்கு 24 மாறுபாடுகள் அமைக்கின்றன. தமிழிலோ ஒருமை, பன்மை என ஒரு பெயரின் இரண்டு பால்களே உண்மையின், எட்டு வேற்றுமைக்கும் 16 வேறு பாடுகளே அமைகின்றன.

ஆனால் தமிழில் வேற்றுமை யான்மைக்காக மாறுபடும் சொல்லின் திணையை அநுசரித்து வெவவேறு மாறுபாட்டு ஈறுகள் அமையவில்லை ஆனபடியால அப்பாஷையில 16-வகை ஈறுகளே காணபபடுகினறன. வடமொழியிலோ பெயரின் திணைக்குறி (லிஙகம்) அறிவிககும் ஈறுக்குத தக்க தாக மாறுபாட்டு ஈறுகள மாறுருபம அடைகின்றபடியால் ஒவ்வொரு திணைக்குறிககும் 24 மாறு பாடு வீதம மூன்று திணைக்கும 72 மாறுபாடு ஏற்படுகினறன. ஒவ்வொரு லிங் கத்தைக் குறித்து வரும ஈறுகளும பலவானபடியால் மூன்று திணைக்கும் ஏற்படும் மாறு பாடுகள பல வாகின்றன.

சர்வநாமங்களிற்போல, எல்லா நாமக்களுக்கும் பொரு ளியல்புக்குத்தக்க திணை ஏற்படாமல் சொலலியலபுக்குத் தக்க திணை ஏற்படுத்தி யிருப்பதின நோக்கததை நாம் ஆராய்ந்தால பாஷையின சொற்கள காதுக்கு இனிமை பயக்கும் வண்ணம எதுகை அமைந்திருககவேண்டும என்ற கருத்தே வடமொழியில திணையிலக கணததைத தூண்டிய தாகத் தெரிகிறது. பொருளியல்பு நோக்கிப் பார்த்தால் ஒரு பாஷையின பெரும்பானமைப் பெயர்கள் நபுமசகததிணையில அமைகின்றன. இப்பெயர்களுக்குப்பதிலாக வாக்கியத்தில் சர் வநாமம் ஏற்படுங்கால் தத் என்ற சொலலே அடிக்கடி காதுக்கு வரும். ஸ என்பதும ஸா என்பதும் குறைந்த அளவே

வழங்கப்படும். மெல்லோசையுடைய இவ்விரண்டு சர்வநாமங்களும் வடமொழி வாக்கியத்தில் பல தடவை வழங்குவதற்காகப் பொருளியல்பால் நபும்ஸகத்திணையில் அமைந்துள்ள பெயர்களிற்பல ஆணதிணைச் சொற்களாக, அல்லது பெண் திணைச் சொற்களாகக் கருதப்படுகின்றன. இச்செயற்கைத் திணையை நாம் எளிதில் அறியும்படி அச்சொற்களுக்கு ஈற்றில் பிரத்யேக லிங்கங்கள் (அடையாளங்கள்) அமைக்கப் படுகின்றன.

வாக்கியத்தில் ஆண் திணைக்கும் பெண் திணைக்கும் உரிய இச்சர்வ நாமங்களின் மிகுந்த வழக்கால் மட்டும் இசை அமைப்புப் போதாதென்று இசைப்பெருக்குக் கொடுக்கக் கூடிய வேறொருவிதியும் வடமொழியில் அமைந்திருக்கிறது.

அடைமொழிப் பெயர், முடிவு மொழிப்பெயர் என்ற ஒரு தொடரின் இருவகைப் பெயாகளும வேற்றுமை பானமை களுக்காக மாறுபாடு (declension) அடையுமகால ஒரே விதமான திணையில மாறுபாடு அடையவேண்டும் என்பது தான் அவ்விதி. உதாரணமாக 'ஏகபதனயா, குலம ஸம் பிராப்தயா புண்யம குலே மகதி சாதயா' (ஒருவனுக்கே உரிய பதனியால், புணய குலததை வாழ்க்கைப்பட்டு அடைந் தவளால், பெரிய குலததில பிறந்தவளால) என்ற வாகயத் தில் ஸம்பிராப்தயா, ஜாதயா எனற இரண்டும் ஏக பத்னயா என்பதற்கு அடைமொழிகளா. முடிவு மொழியாகிய 'ஏக பதனி' என்பது மூனறும் வேற்றுமையில அமைந்திருக்கிறது. அதுபோல இரண்டு அடைமொழிகளும் மூனறும் வேற்றுமை உருபு பெற்று 'ஏகபதனயா' எனபத னோடு இசை ஒத்து ஒலிக்கினறன; தமிழில இசைக்காக அடை

மொழிகள் வேற்றுமை யுருபு ஏற்பவையல்ல; பிறந்த் அடைந்த (ஒருவனுக்குப்) பத்னியால் என்றே தமிழிற் சொல்வது நேர்மை.

மேலும் மேற்கண்ட வாக்கியத்தில் குலம் சம்பந்தப் பட்ட தொடரானது தமிழில் புண்ய குலத்தை அடைந்த என்றும் மகா குலத்தில் பிறந்த என்றும் சொல்லப்படும். 'புண்ய' 'மகா' என்ற அடைமொழிகள் முடிவு மொழியின் வேற்றுமைக்கிசைய மாறுபடாமை கவனிக்கத்தக்கது.

இவ்வாறு இசைவிகற்பம் அடையும்பொருட்டு, இயற்கை விதிப்படி அஃறிணையில் அமைக்கப்படவேண்டிய சொற்கள் எல்லாம ஆண் திணையிலும பெண் திணையிலும் அமைக்கப் பெற்று அவற்றிற்குரிய லிங்கங்களுடன் முடிவடைகின்றன.

இச்சொற்கள் வேற்றுமைபான்மைக்காக மாறுதலடை யும்பொழுது இவற்றின் அடைமொழிகளும இவற்றைப் போல ஆண திணையிலும் பெண் திணையிலும் மாறுதல டைந்து இசைச் சுவையை உணடுபண்ணுகின்றன.

இவ்வாறு இசையுண்டு பண்ணு நோக்கமொடு வட மொழியில் வாக்கியங்கள் எழுதப்பட்டு வந்தபடியால அப் பாஷை நாட்டிடை வழங்காமல வித்வான்களிடை மட்டும் வழங்கப்பட்டுவிட்டது.

இவ்வாறு இசை நோக்கத்திற்காகச் சொற்களுக்குச் செயற்கைத்திணை அமைக்கப்பட்ட வடமொழி இலக்கண விதி களைத் தமிழில புகுத்திச் சேனுவரையர் முதலாயினோர் சொல் லதிகாரச் சூத்திரங்களுக்கு உரை வகுத்தார்கள். அவ்வுரை தமிழ் மொழிக்குப் பொருத்தமல்லாததால இலக்கணம பயில் வார்க்குத் தமிழ் இலக்கணம விளங்கத் தகாதது ஆயிற்று.

வடமொழி யிலக்கணத்தைப் பின்பற்றி அபிஜ்ஞா (=ஞானம்) என்ற சொல் விஷ்ணுவின் குண அம்சமாகக் கருதப்பட்டுப் பெண்திணைச் சொல்லானபடியால் பெண் தெய்வம் எனப்பட்டது. இச்சொல் தமிழில் பின்னை என மருவிப் பின்னைப் பிராட்டி எனப்படுகிறது.

நாராயாணன் என்பது நீர் (=குணம்) உடையவன், நீர்க் குணமுடையவன் எனப் பொருள்பட்டு இவ்வுலகின் வியற் கருத்தாவாகக் கருதப்பட்ட கடவுள எனப்பட்டது.

இமைத்தல், நொடித்தல் என்பன அளத்தல் என்னும் பொருளின. அளத்தல் என்ருல ஞானத்தால் பொருளின் தன்மையை அளத்தல். இமை என்னுஞ் சொல் உமை என மருவி ஞான ரசுவரியைக் குறிக்கும். பர்வதம்போன்ற திண்மை அல்லது வைராக்யம் ஞானத்திற்கு உண்டானபடியால் உமை மலையிற் பிறந்து கல்போல் திண்மை படைத்தாள் எனப்பட்டது.

ஞானமுடைய கடவுள் ஆண்பாலாகக் கருதப்பட்ட பொழுது நொடித்தான் எனப்பட்டு பரமசிவனைக் குறித்த தாகச் சொல்லப்பட்டது. நொடித்தான் மலை என்ருல் பொருளின் மாத்திரை (=அளவு) அளந்த கடவுள் மலை நொடிப்பது மாத்திரை என்ற சுந்தரமூர்த்தி தேவாரத்தை நோக்குக.

பின்னல் 'நொடித்தான்' என்பது தவறுதலாக அழித்தான் எனப் பொருள்பட்டதாகக் கூறப்பட்டது. அளக்கும் ஞானத்தால் பாபம் அழியும் ஆனபடியால் நொடித்தான் என்பது அழித்தான் என அநாவசியமாய்ப் பொருளதிகரிக்கப் பட்டது. பின்னல் லோகத்தை அழிக்கும் எமனுக்குக் கொடுக்கப்பட்டு எமனும் சிவன் எனப்பட்டான், சிவன் காலகாலன் ஆனபடியால் இப்பொருள் பிழைபட்டது.

குறுந் தொகை

தமிழ் நூல் விளக்கு முதற்பாகத்தின் முகவுரையில் குறுந்தொகையானது தமிழ் நூற்களிற் சிறந்தவற்றில் ஒன் றெனக் கூறினேன். இந்நூலிலிருந்து சில பாடல்களை இங்கே எடுத்தெழுதி எனக்குத் தோற்றுகிற உரைக்குறிப்பும் காட் டிச் செல்கிறேன் :

கடவுள் வாழ்த்து

தாமரை புரையுங் காமர் சேவடிப்,
பவழத் தன்ன மேனித், திகழொளிக்,
குன்றி யேய்க்கு முடுக்கைக், குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்,
சேவலங் கொடியோன் காப்ப,
ஏம வைக லெய்தின்று (ஆல்) உலகே.

சேவடி = செம்மையாகிய முத்தியாகிய நிலை க் கொடுக்கும் பாதம்.

பவழத்து அன்னமேனி = தர்மத்தின் செந்நிறம் ஒத்த வண்ணம்.

திகழ் ஒளி = அறிவை விளக்கும் ஞானம்.

குன்றி ஏய்க்கும் உடுக்கை...குன்றி முத்தின் செம்மை நிறத்தை ஒத்த நிறமுடைய புண்ய குணமாகிய ஆடை.

குன்றின் நெஞ்சுபக எறிந்த = வேல் = காமம், வெகுளி, அவலக்கவலை யாகிய மயக்கம் ஆகிய முக்குறும்பு எனப்படும்

முக்குற்றத் (முச்சிறுமை) தின் தன்மை பிளந்து சிதையும் படி எறியப்பட்ட .... ஞானமாகிய வேல். [வேல் = வெல்லும் கருவி.]

சேவலம் கொடி = செம்மை அல்லது அறம் என்பபடும் வல்லமையுள்ள கொடி. காப்ப = கொடியை உயர்த்திய முருகக்கடவுள் காப்பதால்; உலகு ஏமததில் வைகுதல் எய்தின்று = மக்கள துன்ப நிவிர்த்தியாகிய சேம நிலையில் தங்குதலை அடைகின்றது.

சேயோன் (= முருகன்) என்ற பதத்தின் பகுதியான சே என்பதும் சேவலம் என்ற தொடரிலுள்ள சே என்பதும் ஒரே சொல்லே. பிற்காலத்தில் புராணிகர்களால் சேவல், மயில் என்னும் பறவைகள் கொடியாகவும் வாகனமாகவும் புனைந்துரைக்கப்பட்டன. வள்ளி நாயகம் என்பதில் வள்ளி என்பது குரு எனப்பொருள்படும். வள்ளிநாயகம் என்றால் குரு பரன் என்பது கருத்து. தேவசேனை என்பது தேவர்கள் அல்லது ஞானிகளின் கூட்டம். குருக்களின் தொகுதியால் சிறந்தகுரு என முருகன் வணங்கப் பட்டான் என்பது கருத்து. வள்ளி, தேவசேனை என்ற சொற்களிலிருந்து புராணிகர்கள் லோகஞான ஈசுவரி, மோக்ஷஞான ஈசுவரி என்ற இருசக்திகள் கற்பித்துப் புராணக் கதைகள் எழுதினார்கள்.

1. செங்களம் படக் கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங் கோட்டியானைக்
கழல் தொடிச் சேய் குன்றம்
குருதிப் பூவின் குலைக் காந்தட்டு (எ)

டாக்டர் சுவாமிநாதய்யர் பதிப்பில் 'மேற் கோளாட்சி' என்பதன் கீழ் நச்சினார்க்கினியர் இப்பாடலிற்கு இரண்டு கருத்துக்கள் கொடுததிருக்கிறதாகக் காட்டியிருக்கிறது. ஒன்று 'தோழி தலைவியை குறியிடத்துய்த்து நீங்கியது' என்பது. இது பூப்பும் மெய்யுறு புணர்ச்சியும் இல்லாத களவுக்காலததின் தன்மையானது பிறழ்ந்தஉணர்ச்சி வயத்தால் திரிபாக உணர்த்தபபட்ட பிற்காலத்துத தோன்றிய கருத்து. இன்னொன்று, "தலைவி காந்தட் பூவாற் குறைவிலள். ஆதலால் நின் கையுறையாகிய காந்தட்பூவை நான் தலைவிக்காக ஏற்றுக் கொள்ள மறுக்கிறேன் என்பது". கையுறை ஒப்புக்கொண்டபின் அறத்தொடு நின்று வரைய வேணடும் ஆனபடியால் அறத்தொடு நிற்கக் காலம் சேர்ப்படாத காலததில கையுறை மறுக்கப்படும். ஆனதால் களவுக் காலததின் பரிசுத்த நிலையை இக்கருத்துத் தோற்றுவிக்கிறது. இது சிறந்த கருத்து; இவ்வாறு இரண்டு கருத்துக்கள் கொடுப்பதிலிருந்துப் பழையகாலத்துத் தமிழ் நாட்டிலுள்ள களவொழுக்கம் இன்னதென உரையாசிரியர்கள் உரைகொண்டும் பொருளதிகாரம கொண்டும் அறியமுடியாது என'த் தெரிகிறது.

2. கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும உளவோ நீ அறியும் பூவே.

இப்பாடலை ஆக்கியோன் இறையனார் எனப்படுகிறார்; இறையனார் என்பது இறைவனார் என்ற சொல்லின் வேறொருவடிவமாகததான் கருதப்படவேண்டும். ஆசிரியன்

என்பது கருத்து. இங்கே தமிழ் நூலின் ஆதி ஆசிரியன் எனக்கருதப்படவேண்டும் ; குறுந்தொகைக் காப்புச் செய்யுளில் வழுத்தப்பட்ட முருகக் கடவுளே அவ்வாதி ஆசிரியனாக இருக்கவேண்டும். பின்னால் திருவிளையாடற் புராணத்தில் புனையப்பட்ட புராணக்கதையின் பிரகாரம் ஆலவாய் நகரிலுள்ள சிவபெருமான் ஆதி ஆசிரியனாகக் கருதப்பட்டார். உருத்திர சன்மா என்ற பேர் முருகனைச்சுட்டுவதாக ஓரிடத்திலும் உருத்திரன் என்ற பேர் சிவபிரானைச் சுட்டுவதாகப் புராணத்திலும் கூறப்படுவதால் குறுந்தொகையில் முருகனைக் குறித்த இறையனார் என்னும் சொல்லானது புராணத்தில் சிவபிரானுக்கு ஏற்றப்பட்டது.

இறையனார் என்பது ஆதியில் மானுஷ்ய வடிவுடைய ஓர் ஆசிரியனைக் குறித்திருக்கவேண்டும்.

இப்பாடலுக்குள்ள பழைய குறிப்புரை உண்மைக் கருத்தைத் தெரிவிக்கவில்லை. மெய்தொட்டுப் பயிறல் முதலாயின நிகழ்த்துதல் ஆகிய கருத்து இப்பாட்டிற்கு அவசியமில்லை. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் நிகழ்ந்த காதல்மணத்தைக் குறைவுபடுத்த இவ்வாறு கருத்து எழுதப்பட்டிருக்கிறது. இயற்கைப் புணர்ச்சி என்பது இயற்கைக் காட்சி என்ற கருத்தைத் தரும்; 'புணர்ச்சி பழகுதல்' என்ற தொடரில் கண்ட புணர்ச்சி என்ற சொல்லின் கருத்தை இங்கே தரவில்லை.

'காமம் செப்பாது கண்டது மொழிமோ' என்பதற்கு "தலைவனும் தலைவியுமாகிய நாங்கள் எங்கள் காதலை இங்கிதம் (அல்லது உடல் நடுக்கம் சொல்லாடல்) முதலிய அவயவக் குறியின் மூலம் வெளிப்படுத்தாது கண்ட அச்சம

யத்தில் என்னால் காணப்பட்ட தலைவியின் அவயவங்களிற் சிறந்த கூந்தலின் இயல்பைக் கூறுவாயாக" என்பது கருத்து.

செப்பாது, கண்டது என்பன தும்பியுடன் இயைய வில்லை. செப்பாது என்பதற்கு 'யாம்' தோன்றா எழுவாய்; கண்டது என்பதற்கு 'யான்' தோன்றா எழுவாய்.

இப்பாடலிற்கு வேறொரு தகுந்த பொருள் இது வாயிருக்கலாம்: துறவி வண்டுக்கு உவமிக்கப்பட்டு அழைக்கப்படுகின்றான். நீ கற்கத் தேடும் ஞானப்பூங் கோதையாகிய நன்னூல் மாலை என் தலைவியின் கூந்தலி னும் இன்பம் கொடுக்குமோ? 'தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு' என்ற குறளின் கருத்தை இப்பாடல் அமைத்திருக்கிறது எனவும் கருதலாம்.

டாக்டர் சுவாமிநாத அய்யர் உரையில் மேற் கோளாட்சி என்ற தலைப்பின் கீழ், "மு" என்ற குறியின் கீழ் 'என் நிலத்து வண்டாதலின் மெய் கூறெனத்தன் இடம் அதுவாகக் கூறலின் இடம் அணித்தென்று" என்ற உரைப்பாடம் பிழைபட்டது. முதற்காட்சியாகிய இயற் கைக் காட்சிக்குப் பின் குறியிடம் சந்தித்தல் என்ற துறை யானது காதல் மணத்தின பரிசுத்தத் தன்மைக்கு இழுக்கு நேரும்படி செய்வதால இது பிற்காலத்திய புலவர்களால் ஏற் படுத்தப்பட்ட முறை எனக்கருதவேண்டும:

3. நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே; சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

கருத்து: குறிஞ்சிப் பூக்களிலிருந்து மிகுதியாகத் தேனடையாகிய இறாலை ஈட்டும் தேனீக்களையுடைய குறிஞ்சி நாட்டுத்தலைவனை நான் என் இருமுது குரவராகிய கொடுப்பாரும் என் தோழி செவிலி முதலிய அடுப்பாளும் தலைவனுக்குச் சமயம் வந்துழி உதவ அவனை அடுத்து நின்று அவன் காரியங்களைப்பார்க்கும பாங்கனாகிய அடுப்பானும் இன்றி எதிர்ந்து நேர்ந்த இயற்கைக் காட்சியால் பெருகிக் கடல்போல் ஆழமாய் வளர்ந்த இனிய நட்பைப் பண்டம் மாற்றுவார் முறையில் அளவிட வேண்டுமானால் தரணியாளும் பாக்கியத்திலும் அந்நட்புப் பெரிது; வானலோகம் எனப்படும் மறுமைக் கண்ணுள்ள பேரின்பமாகிய ஞானத்திலும் அந்நட்புப் பெரிது.

இக்கருத்துரையில் இயற்கைப்புணர்ச்சியின் தன்மை கொடுப்பாரும் அடுப்பாரும் உடனிருக்கும் கொடை மணத்தில் உண்டான செயற்கை எதிர்ப்பாட்டினின்றும் வேறு எனக்காட்டப்பட்டது.

இங்கே கருங்கோல் என்றது கரிய கோலமுடைய வண்டு என வடமொழி இலக்கணம்பற்றி அன்மொழித் தொகை என விசேடிக்கப்பட்ட ஆகு பெயர். கருமை = நீலம், நீல நிறமுடைய தேனீ.

கருங்கோல் குறிஞ்சி = கருங்கோல வண்டு யாழ்போல் இசை செய்து மொய்க்கின்ற குறிஞ்சி. 'கோலவண்டி யாழ் செய் குற்றாலம்' என்ற தேவாரப்பகுதியை நோக்குக.

4. நோமென் னெஞ்சே, நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுதல் நோம் என் நெஞ்சே.

இமை தீய்ப்பு அன்ன கண்ணீர் — என்றது தலைவியின் கண்களின் அழகை வாட்டுகின்ற கண் கலக்கத்தை விளைக்கின்ற துன்பக் கண்ணீர். இது தலைவன் பொருளுக்காகப் பிரிந்த பின் தலைவி தனியே உறையும் பொழுது ஏற்படுவது.

தாங்கி = தண்ணீர் ஏற்பட ஒட்டாமல் தடுத்து; உடனுறைவானது கண்ணீர்த்தடைக்குக் காரணம், என உட்கொண்டு பாடினது.

அமைதல் = உடன் உறைதல்.

இரண்டாவது அமைதல் பொருந்துதல்; தடுத்து உறைதற்குள்ள (அழகு ஆற்றல் முதலிய) பண்புகளுடைய என்பது கருத்து. அமைவிலராகுதல் - பிரிவு ஆகிய எதிர்காலத்தில் உடன் உறையாமையை (நினைத்து) என் நெஞ்சு அஞ்சி வருந்தும், அதாவது அச்ச நோய் அடையும். மலைவு நீங்கிய தெளிவாகிய (= hope) உணர்ச்சி அகன்று அச்சம் தோன்றுகிறது, என்பது கருத்து.

உடனுறைவில் கண்ணீர்வடிவு நிகழாதானதால், தாங்கி என்பது துடைத்து என்னும் பொருள் தராது.

8. கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே.

பழைய கருத்துரையில் கண்டபடி இப்பாடல் காதற்பரத்தையின் கூற்றாகக் கொள்ளவேண்டியது அவசிய

மில்லை. தலைவனின் பெற்றோராகிய இருமுது குரவரின் கழறு தற் கூற்று எனத்தகும். இருமுது குரவரால் 'என் பிள்ளையைப் பார்த்துக்கொள்' என்று தலைவன் பாங்கற்குக் காட்டி அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட அத்தலைவனை அப்படியே இருமுது குரவரிடமிருந்து பெற்று அத்தலைவற்குத் தீயன நேராதனபடியும பண்பான நேரும்படியும் அத் தலைவனை அடக்கி ஆண்டு பார்ப்பானனபடியால் பார்ப்பான் எனவிசேடித்துக் கூறப்படும பாங்கன் போல் இருமுது குரவரும் கழறுதற்கு உரியவராவர்[1] (கழறுதல்= குற்றம் தடுத்து உரையாடல்)

இருமுது குரவர்போல் அவர் தன்மையை ஒருவனே அடைந்தபோதிலும் உவமானததால் பாங்கன் பார்ப்பார் எனப்பட்டான். குழந்தையைப் பார்க்கும் பெற்றோர் பன்மையாதலின் அவர் பார்ப்பார் எனப்படுவர். பின் பார்ப்பார் என்பது தாய் அல்லது தந்தையைக் குறித்தது. பின் அவரில் ஒருவர் போன்ற பாங்கனையும் குறித்தது. பிற் காலத்தில் பார்ப்பான் என்ற சாதிக்குரிய சொல்லோடு பார்ப்பார் என்ற சொல் மயங்கப்பட்டுப் பிறழ்ந்த சொலலிலக்கணம் உரைக்கப்பட்டது. இறையனார் அகப்பொருள் உரையில் தீயன நேராமல் கண்டு பண்பாயின நேர அடக்குவவாயாக' என்று இருக்கவேண்டியது எழுதுவோர் பிழையாட்டியாறிக் காணப்படுகிறது.

எம்மில் பெருமொழி கூறித் தம்மில் = இருமுது குரவராகிய எம்மிடத்துப் பெண் வழிச்சேறலைத் தவிர்த்து நும்

---

1. இக்கருத்துள்ள வாக்கியம் இறையனார் அகப்பொருள் உரையில் பிறழ்ந்து காணப்படுகிறது. பிறழ்ந்தவாறே டாக்டர் சுவாமிநாதய்யர் குறுந்தொகையிலும் எடுத்துரைக்கப்படுகிறது.

சொற்களை மந்திரமாகப் பேணுவேன்' என்ற பெருமொழி கூறித் தன் புதல்வன் தாயாகிய தலைவியும் தலைவனாகிய தானும் இருவரும் தனித்திருக்கும்பொழுது. கையும் காலும் =அடுத்தது காட்டும் பளிங்கு ஆகிய கண்ணாடி எதிரில் நிற்கும் ஒருவனுடைய கையும் காலும். தன் புதல்வன் தாய் என்றது இருமுது குரவராகிய யாம் தலைவனைப் புதல்வனைப் பெற்று அவன் நன்மையைக் கருதி நாம் நோயுழந்து உழைக்க நம்மைப் பேணாது நம்போல் தன் வழி வந்த புதல்வனின் நன்மையைக் கருதி உழைத்து நம்மிடத்துச் சொன்ன பெருமொழி மறந்தான் என்பதன் பொருட்டு.

இருமுது குரவரினும் மிகையன்புடையார் தாய் எனக் கருதித் தலைவியானவள் தலைவனின் புதல்வன் தாய் எனப் பட்டாள்.

பாடல்கள் 9, 10 :—

இப்பாடல்கள் தலைவியின் ஊடலைப் பொருளாகக் கொண்டன; ஊடலிற்குக் காரணம் தலைவனின் பரத்தமை எனக்கொள்ளவேண்டியது அவசியமில்லை. பொருட் காரணமாகப் பிரிந்த பிரிவே போதுமான காரணம் எனக் கருத[illegible]. பரத்தமை என்ற சொல்லும் ஆதிகாலத்தில் அயன்மை எனப் பொருள்பட்டு மனைக்குப் புறமாகப் பொருள் கருதிப் பிரிதல் எனவும் கருதப்பட்டிருக்கலாம். 10-வது பாடலில் விழவு முதலாட்டி என்று தலைவியைக் குறித்த தன் காரணம் கணவனின் குற்றம் பாராட்டாது எப்பொழுதும் தான் கணவனின் இன்பத்திற்குக் காரணமான செயலைத் தலைவி செய்யவேண்டும் என்பது. ஊடல் இல்லாத இடத்தில்தான் விழவு நிகழும.

இருபாடல்களிலும் யாய் என்றது ஆகுபெயர்; பெற்ற குழந்தையின் குற்றத்தைப் பொறுத்துக் குழந்தைக்கு மகிழ்ச்சி விளைக்கும் தாயினது நிலைமையைத் தலைவி அடைந்து ஊடல் நீங்குகின்றுள் என்பது கருத்து. பிற்காலத்து ஏற்பட்ட கலித்தொகைப் பாடலை நோக்கி இச்செய்யுட்களுக்குப் பொருள் கோடல் நேர்முறை யன்று.

14. இப்பாடல் 'மடல்மா கூறல்' எனும் துறையில் வரும். காம மடல் அல்லது காம மிகுதி அடைந்து விலங்கு போல் அறிவிழந்து நாண் துறந்து சில கூறல் என்பது கருத்து. பனைமடல் பெண்ணை மடல், மடலாலாகிய குதிரை, எனப் பின் வந்த புலவர் பிறழ்ந்த வுணர்வு வயப்பட்டுக் கூறினர். அப்பின்காலப் பாடல்கள் நோக்கி இப்பாடலிற்குப் பொருள் கொள்ளுதல் பிழைபட்ட முறையாகும். இப்பாடலில் நாணுகம் என்பது நாண் உகுகம் என்பதன் மரூஉ. நாண் துறப்போம்' என்பது கருத்து.

17. மாவென மடலு மூர்ப ; பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமம் காழ்க்கொளினே

மடலூர்ந்து தலைவன் நாண் துறந்தால் ஊடல் அலர் எழும்; அவ்வலரால் தலைவி தோழியிடத்துத் தன் காதல் நிலைமை கூறி இல்லறமாகிய அறத்தொடு தன்னை நிறுத்தும்படி தன் பெற்றோரிடம் சொல்லி முயற்சிக்க வேண்டுவாள். பின் மணம் நிகழும். ஆதலால் அடிப்படைக் காரணமான காழ் அல்லது மடல் கொண்ட காதலின் இயல்பு ஒரு சிறந்த துறையாகப் புலவர்களால் கூறப்படும். அவ்வாறு கூறப்பட்ட பாடல்களில் இப்பாடல் ஒன்று. மா என மடலும்

ஊர்பீ = கண்டார் விலங்கு என்று கூறும்படியாகத் தலைவர்கள் காம மடலால் இழுக்கப்பட்டுப் பிதற்றுரை ஆடுவார்கள்.

லகுத்தன்மையால் காற்றினால் அடிக்கப்பட்டு மேலெழும் எருக்கம் பூக்களால் கட்டப்பட்ட மாலையை ஒத்த அறிவுக்காழில்லாத வார்த்தைகளை தேனுடைமையால் இனிமை உடைய பூப்போன்ற சொல் மாலையாகிய புலவர் உரை போலக் கூறுவர். சூடுப = தங்கள் தலை மேலன்று; அவர் உரை கேட்கும் ஊரார் தலைமேல் சூடுவார்கள். புகழ் மாலைக்குப் பதிலாக இப்பிதற்றுரையை ஊரார் முன் கூறுவார்கள் என்பது கருத்து. செந்நாப்போதார் என்பதில் நாப் போது என்பது சொல்லாகிய மலர் எனப் பொருள்படும். இப்பாடலிலும் பூ என்பது அந்நாப்போதுதான் என உணரத் தக்கது.

18. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே; சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர் தவச் சிறிது: காமமோ பெரிதே.

இப்பாடலின் பழைய கருத்துரை நேரிதன்று. இரவுக் குறி வருதல் என்ற கருத்து இங்கே கொண்டு வரல் அவசியமன்று.

செவ்வியை ஆகுமதி = மிக வளர்ந்த காதலைத் தாங்கக் கூடாதபடி தலைவி மெலிந்து விட்டாள்; வரைவு நீட்டித்தால் உயிர் குறுகி இழக்கும்படி ஏற்படும்; ஆதலால் யான் தலைவியின் பெற்றோர்பாட்டு அறத்தோடு நின்றுவிட்டேன். தலைவனுக்குப் நீயும செவ்விய அறத்தில் நிற்க இசையவேணும். செவ்வி இங்கு பருவம் குறிக்கவில்லை; தலைவனின் மன நிலை

குறித்தது. பருவம் குறித்ததாகத் தவறுதலாக* உட்கொண்டு பழைய உரைகாரர் செம்மையல்லாத 'இரவுக்குறி' என்று கருத்து எழுதுகிறார். இரவுக்குறி என்ற தவறு முறை பிற்காலப் புலவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

288. கறிவளர் அடுக்கத் தாங்கண் முறிபெருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்க லுடன்*
இனிய னாகலி னினத்தி னியன்ற
இன்னா மையினு மினிதோ
இனி தெனப் படூஉம் புத்தே ளுாடே.

இப்பாடலில் சுட்டப்பட்ட புத்தேள் நாடு தேவலோகம் எனப்படும். அங்கே ஓயாத இன்பம் உண்டு எனக் கூறப்படும். அவ்வோயா இன்பம் இவ்வுலகத்திலுள்ள இல்லற நிலைக்குரிய கூட்டம் பிரிவு என்பவைகளிற் பிரிவில் உண்டாகும் துன்பத்திலும் கொடிது என்பது கருத்து.

இப்பாடலின் உரையில் 'இனியன் = பரத்தையிற் பிரிந்தனனாயினும் நம்மாட்டு இனிமையை உடையான்' என்று கூறியிருப்பது பொருத்தமன்று. தலைவன் பொருளுக்காகப் பிரிந்திருந்த போதிலும் கூட்டம் எதிர்பார்த்தே வாழ்கின்றானாதலால் அக்கூட்டத்துடன் தொடர்புடைய பிரிவாகிய இன்னாமை புத்தேளுலகிற் கண்ட ஓய்வில்லா இன்பத்தினும் கொடிதன்று; அவ்வோய்வில்லா இன்பமானது உள்ளத்தின் தொடர்ப்பாட்டு நுகர்ச்சியால் தேய்ந்துவிடும், என்பது கருத்து.

இனம் = கூட்டம் அல்லது உடனுறைவு.
இன்னாமை = பிரிவு.

40. யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.

இப்பாடலிலிருந்து இயற்கை மணத்திற்குக் குலத்தின் ஒப்புமை வேண்டுவதன்று என்று தெரிகிறது. நெஞ்சு கலந்ததுமட்டும கூறியதால் இது வரைவுக்கு முன்னுள்ள நிகழ்ச்சி ; மெய்யுறு புணர்ச்சி வரைவுக்குப்பின் நிகழ்வதான படியால்.

சில பாடல்களிற் கூறப்படும் பூப்பு என்பது வரைக்குப் பின்னுள்ள மக்கட்பேறுகிய பூப்பு அல்லது பலனைக் குறிக்கும். மாதவிடாயைக் குறிககவேண்டியது அவசிய மில்லை.

இணைப்பு

தமிழ் கற்பார் அறியவேண்டுவன.

மகதநாடாகிய பிஹார் தேசத்தில் பிம்பிசாரன் என்ற அரசன் தலைநகராகிய ராஜகிருகத்திற்குக் கிட்ட உள்ள கழுகுமலை எனத் தமிழில் மொழி பெயர்க்கக்கூடிய பாலி பாஷைப் பேருடைய மலையில்[1] சகிய முனி தம் சிஷ்யர் களுக்கு உபதேசம் செய்தார் எனப் பிடக நூலிற் கூறப் படுகிறது. ' கணக்கிலாத் திருக்கோலம் நீ காட்டிஞய் கழுக் குன்றிலே ' என்று மாணிக்க வாசகரால் சுட்டப்பட்ட தமிழ் நாட்டுக் கழுக்குன்றம் முற்காலத்ததோ அல்லது மகத நாட் டுக் கழுகுமலை முற்காலததோ என ஆராயத்தக்கது. ஹியூவென் ஸாங் என்ற சீன யாத்திரிகன் பௌத்த ஸ்தல தர்சனத்திற்காகப் பரத நாட்டிற்கு வந்தவன் வட நாட்டில் கபிலவஸ்து என்ற புத்தர் பிறந்த ஊரைக்காண முடியவில்லை என்று குறிப்பிடுகிருர். ஆனதால் புத்தர் பிறந்த கபில வஸ்து தென்னுட்டில் இருக்கலாம். புத்தர் உண்மையில் கபிலனின் மாறு ரூபமாய் அல்லது கபிலர் சிஷ்யராயிருக்க லாம். அப்படியாஞல திருக்கழுக்குன்றமே ஆதியூரா இருக்க வேண்டும்.

கழுக்குன்றம்=குற்றம் அல்லது பாபத்தைச் கழுவும் நூல் எனப் பொருள்பட்டுக் கழுவுகுன்றம் எனபதன் மருவு வாயிருந்து பின் தவறுதலாகக் கழுகுமலை எனப் பிறழ்ந்து உணரப்பட்டிருக்கலாம்.

சீர்காழிக்குப் பேரான கழுமலம் என்பது கழுக்குன்றம் என்பதன் மாறு ரூபம். மலம் கழுகும் மலையுடைமையால்

---

[1] இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு நூலில் இம்மலை ' vulture's peak ' எனப்படுகிறது.

65020

அவ்வூர் கழுமலம் எனப்பட்டது. மலயத் துவஜன் என்ற பெரும் மலத்துவம்ஸன் என்றதன் மரூஉவாயிருக்கலாம். பாபக்கொல்லி என்பது கருத்து. பிடகததில் ஓரிடத்தில் வடதிசை புத்தரின் தோழர் திசை என்றுட் தென் திசை புத்தரின் ஆசாரியர் திசை என்றும் கூறப்படுகிறது. 'மலே' என்ற சொல்லுடன் சம்பந்தமுள்ள 'மலயம்' என்ற சொல் லும் 'மலம' என்ற சொல்லும் பிற்காலத்தில் மயங்கப்பட்டு மலயத்துவசன் என்ற சொல் மலயக் கொடியை யுடையவன் எனத் திரித்து உணரப்பட்டது.